www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு - 15 20 யூன் 2001 விலை:- 10.00

அநியாயங்களை அங்கிகரிப்பதும் நியாயங்களை கொலை செய்வதும் ஒன்றே.

## சுதந்திரத்திற்காகப் போராடியோர் இழிவு செய்யும் அவலகம்

தான் பிறந்த சமூகத்தின் விடுதலைக்கு போராடி மரணித்தவர்கள் சுதந்திரப் போராளிகள் என்ற உன்னத ஸ்தானத்தில் வைத்தே போற்றப்படுகிறார்கள்.

ஆனால் எமது சமூகத்தில் சுதந்திரத்திற்காகப் போராடிய இளைஞர்களும், யுவதிகளும், அறிவு ஜீவிகளும் மறக்கப்பட்டு அல்லது வெறும் எண்ணிக்கையாகக் கருதப்படும் நிலையே காணப்படுகின்றது.

ஆனால் தேச விடுதலை, சமூகத்திற்கு எந்தவித சம்பந்தமும் இல்லாத புல்லுருவிகளும், அயோக்கியர்களும் உயர்ந்த நிலையில் வைக்கப்படும் அளவிற்கு எமது சமூக நிலை தரந்தாழ்ந்துள்ளது.

இந்த நீசர்களுக்கு சுதந்திரம் என்றால் என்னவென்றோ, ஜனநாயகம் என்றால் என்னவென்றோ, மனித உரிமைகள் என்றால் என்வென்றோ அவற்றிற்காக உயிரை விடுவது எவ்வளவு பெரிய தியாகம் என்பது சுட்டுப் போட்டால் கூட புரியாது.

சமூகத்தில் அவலநிலையை வைத்து தமது பிழைப்பை எவ்வாறு நடத்துவது என்பதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள்.

இந்த வெட்கக் கேடான, அவக் கேடான பேரவலத்தில் இருந்து எமது சமூகம் மீள வேண்டும்.

எமது சமூகத்தின் விடுதலைக்காக போராடி மரணித்த பல்வேறு இயக்கங்களின் போராளிகளுக்கும், சமூக மனிதர்களுக்கும் உரிய கௌரவம் அளிக்கப்படல் வேண்டும். வரலாற்றில் உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.




# அந்தரத்தில் இலங்கை

இன்றைய இலங்கை சுதந்திரத்திற்கு பின்னான 50வருடத்தின் பின்னர் 20வருட சிவில் யுத்தத்தின் பின்னர் திரிசங்கு சொர்க்கத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது.

“வினை விதைத்தவன் வினை அறுப்பான்” என்ற அனுபவ வார்த்தைக்கு இணங்க தீர்க்க தரிசனமற்ற அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் பாரதூரமான நிலையொன்றைத் தோற்றுவித்துள்ளன.

அரசியல், பொருளாதார, சமூக வாழ்வு பதட்டமானதாகவும் அச்சமூட்டுவதாகவும் மாறியுள்ளது.

1994 இல் சந்திரிகா அரசு பொறுப்பேற்றபோது குரூரமும் கொலை வெறியும் கடந்த புதிய யுகமொன்றிற்குள் பிரவேசிக்கிறோம் என்ற நம்பிக்கை மக்கள் மனங்களில் கிளர்ந்தெழுந்திருந்தது.

ஆனால் துரதிஷ்டவசமாக அந்த நம்பிக்கைகள் ஏழு ஆண்டுகளின் பின் முன்னெப்போதும் கண்டிராத கீழ்மட்ட நிலையை அடைந்துள்ளது.

குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் மக்கள் இழுபட்டுப் போகும் இனப்பிரச்சினையில் சலிப்படைந்துள்ளனர்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களை விட ஒன்றிலும் சம்பந்தமில்லாத அப்பாவி பொது மக்களே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கடந்த 20 வருட யுத்தத்தில் பலியாகியுள்ளார்கள். வடக்கு கிழக்கின் சமூக பொருளாதார வாழ்வு மிக மோசமான ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

புலம் பெயர்ந்த அகதி மக்களின் தொகையை விஞ்சிய உள்நாட்டு அகதிகள் தோன்றியுள்ளனர்.

உற்பத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டதன் விளைவாக பங்கீட்டு உலர் உணவு பெறும், நிவாரணம் பெறும் மக்களின் தொகை அதிகரித்துள்ளது.

யுத்தமயப்பட்ட சூழ்நிலையில் சிறுவர்களின் மனோநிலை மிகப் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்

கணவனை இழந்த பெண்கள் குடும்பச் சுமையால் திணறிக் கொண்டிருக்கின்றனர்.

இடப் பெயர்வின்போது புதிய இடத்தில் வாழ்வதற்கு தகவமைத்துக் கொள்வதில் இவர்களே போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணி வெடிகள் புதைந்த குடிமனை, வயல், தோட்டங்கள் நாளாந்தம் மக்களை ஊனமாக்கிக் கொண்டிருக்கிறது.

போக்குவரத்துக்களில் யுத்த காரணங்களுக்காக இரண்டு தரப்பினரும் ஏற்படுத்தி வைத்திருக்கும் நடமாடும் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு மாபெரும் மனிதாபிமானப் பிரச்சினையை உருவாக்கியுள்ளது.



உறவினர்களும் நண்பர்களும் சிதறுண்டு வாழ்தல் என்ற நிலையையும் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ள முடியாத நிலை, நோய், பொருளாதார நெருக்கடி, வறுமை என்பன மக்களை மனம் பேதலிக்கச் செய்துள்ளது.

எல்லைப் பிரதேசங்களில் இருக்கும் மக்களும் படுகொலைகள் வறுமை இவற்றுடன் போராடியபடி சகல நம்பிக்கைகளையும் இழந்து வாழ்கின்றனர்.

போதாக்குறைக்கு இந்த நிலை நாட்டின் சகல இன மக்களின் மீதும் தூக்கமுடியாத பொருளாதார சுமையை ஏற்றியுள்ளது.

சாதாரண அரச ஊழியரோ, தனியார் துறை ஊழியரோ, விவசாயியோ தோட்டத் தொழிலாளர்களோ தமது வாழ்வுக்கான உபாயத்தைக் கண்டுபிடிக்க போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இடம்பெயர்ந்த வாழ்க்கை என்பது எமது எதிர்கால சந்ததியின் கல்வி என்ற வெளிச்சத்தை ஒளி மங்கச் செய்துள்ளது.

சமாதானம் பற்றியதொரு சிறு ஒளிக்கீற்றுக்கூட மக்களை பெரு நம்பிக்கை கொள்ளச் செய்துள்ளது.

தொடர்ச்சி 02பக்கம்

## வரலாற்றுத் தவறு

நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய ஆரவாரங்களே இந்த வாரம் முனைப்படைந்திருக்கின்றன.

ஐ.தே.க.விற்கு வழி திறந்து விடுபவர்கள் 1983இன வன்முறையையும், நூல் நிலையம் எரித்த கலாச்சாரப் படுகொலையையும், வெலிகடைச் சிறைப்படுகொலைகளையும் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும்.

இவர்கள் வரலாற்றுணர்வு இல்லாதவர்கள் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இருந்த கொஞ்சநஞ்ச வாய்ப்புக்களையும் சீர்குலைத்தவர்கள் என்ற வரலாற்றுப் பழிக்கு இரையாக நேரிடும்.

www.padippakam.com



# கண்ணோட்டம்



## சிறுபான்மை மக்கள்

இந்த நாட்டில் இப்போது புதியதொரு ராகம் வாசிக்கப்படுகிறது. அதுதான் தேசிய கட்சிகள் என்று சொல்லப்படும் சிங்கள கட்சிகள் சிறுபான்மை இனங்களின் கட்சிகளின் தயவில் இருக்கக் கூடாதென்பது.

அதற்காக ஐ.தே.க.வும் ஸ்ரீ.ல.சு.க.வும் இணைந்து தேசிய அரசை அமைக்க வேண்டும் என்கிறார்கள். இவர்கள் ஜே.ஆரின் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பை எதிர்ப்பது அதன் எதேச்சாதிகார உள்ளடக்கத்துக்காக அல்ல. சிறுபான்மை இனங்களின் தயவில்லாமல் ஆட்சி அமைக்க முடியாமல் இருப்பதற்காகவே அங்கலாய்க்கிறார்கள்.

பாவம் இவர்கள். படித்துப் படித்து இவர்கள் அதே தவறைத்தான் செய்கிறார்கள். இவர்களுடைய தலைகளில் பௌத்த சிங்கள மேலாதிக்கவாத விஷக்காய்ச்சலைத் தவிர வேறொன்றும் கிடையாது.

இந்தக்கொடிய மூளைக் காய்ச்சலிலிருந்து விடுபடாதவரை இந்த நாட்டில் பேரழிவுகளை தடுத்து நிறுத்த முடியாது.

சிறுபான்மையினர் தம்மை அண்டிப் பிழைக்க வேண்டும் என்ற முன்னாள் ஜனாதிபதி விஜயதுங்கா போன்றவர்களின் மரமும் அதனைப் பற்றிப் படரும் செடி கொடிகளும் என்ற கருத்தே இவர்களின் மனங்களில் மண்டியுள்ளது.

இந்த நாட்டில் சிறுபான்மை இனங்கள் தாம் கொடுப்பவற்றைப் பெற்றுக் கொண்டு திருப்தியடைய வேண்டும். தமது சமூக பொருளாதார தலையெடுப்புக்களுக்கு முயலக்கூடாது என்ற ஆணவத்தனமான முனைப்பு இவர்களிடம் காணப்படுகிறது.

இன்றைய புதிய உலக கிராமம் பற்றிய கருத்து எத்தகைய சர்ச்சைக்குரியதாயினும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்தினதும் சுயாதீனமான வளர்ச்சியில்லாமல் உலகத்திலோ, நாட்டிலோ முன்னேற்றம் ஏற்படாது என்பதே அது.

அதனால்தான் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் உள்நாட்டில் சிவில் யுத்தங்களை உருவாக்கிய சக்திகள் அதிகாரப் பகிர்வை வலியுறுத்துகின்றன.

இலங்கை ஒரு இருண்ட கருமேகம் மூடிய நாடாக இருக்க முடியாது. அது எதிர்காலத்தில் ஒரு வானவில்லாக இருக்க வேண்டும். சிங்கள, மலையக, முஸ்லீம், தமிழ் மக்கள் ஒருவரையொருவர் சமத்துவமாக கருதி வாழ்வதிலேயே இந்த நாட்டின் வாழ்வும் தாழ்வும் தங்கியிருக்கிறது. ஆணவம் பிடித்தவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிலல்ல.

எனவே ஆகவேண்டியதை, ஆகக்கூடியதை பார்ப்பதே புத்திசாலித்தனமாகும்.

### இனங்களின் சமத்துவம்.

ஒரு நாட்டில் இனங்களின் உரிமை அங்கீகரிக்கப்பட்டால் பொருளாதார ரீதியான சமத்துவமின்மைகள் அகற்றப்பட்டால், புதிய நூற்றாண்டில் பிரகாசமான எதிர்காலத்திற்கு எமது வருங்காலச் சந்ததியை அழைத்துச் செல்வதற்குரிய அடித்தளத்தை இட்டால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்?

ஏன் இவற்றை செயற்படுத்த முடியாதிருக்கிறது. ஆம் யுத்தத்தினாலும், இனவாதத்தினாலும் தமது வாழ்வை வளம்படுத்திக் கொண்ட சக்திகள் எங்கே தமது ஆடம்பரமான வாழ்வுக்கு அமைதியும் சமாதானமும் அச்சுறுத்தலாகி விடுமோவென்று அச்சமுறுகின்றன. எனவே இந்த யுத்தப்பிரபுக்களின் கைகளிலிருந்து மக்களை மீட்கப் போராடுவதே ஒவ்வொரு மனிதாபிமானம் கொண்டவரதும் கடமையாகும்.

இன்று இந்த இனப்பிரச்சினையை பாவித்து பல சக்திகள் குபேர சம்பத்துக்களை பெற்றுள்ளார்கள்.

- ❑ ஆயுத தரகர்கள்
- ❑ போதைவஸ்து வியாபாரிகள்
- ❑ ஆட்களைக் கடத்துபவர்கள்
- ❑ பத்திரிகை உலக வியாபாரிகள்
- ❑ கூலிக்கு கொலை செய்பவர்கள்
- ❑ நாட்டில் பிரச்சினை நடக்கும் வரைதான் தமது மேற்கத்திய சுகபோக வாழ்க்கை என்று கருதும் பிரகிருதிகள்.
- ❑ பதுக்கல் வியாபாரிகள், பொது மக்களுக்கு தரமற்ற அத்தியாவசிய பொருட்களை விற்பவர்கள்

இன்னோரன்ன பேர்வழிகளுக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுவது விருப்பமில்லை.

செத்துக் கொண்டிருக்கும் நாடு உயிர்ப்பிக்கப்பட வேண்டுமானால் இவற்றையெல்லாம் கடந்து இன சமத்துவத்துக்காகவும், ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் இயக்கம் நடத்தப்பட வேண்டும்.

## அந்தரத்தில் இலங்......

01ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் உற்சாகமூட்டாத தொடர் நிகழ்ச்சிகள் அவர்களை சலிப்படையச் செய்துள்ளது. தற்போதைய சமாதான முயற்சிகளின் முடிவற்ற கயிறுழுத்தல் மக்களை விரக்தியடைய மட்டுமல்ல விசனங்கொள்ளவும் வைக்கிறது.

இதற்கிடையே குரூரமும் வன்மமும் தொனிக்கும் சிறுபான்மை இனங்களுக்கெதிரான தாக்குதல்களும், காட்டுக் கூச்சல்களும், இலங்கை பல்லினங்களின் நாடு என்ற கருத்தை சிதறடிப்பதாக அமைகின்றன.

இந்த நாட்டில் இப்போது செய்யவேண்டியிருக்கும் காரியங்கள் பல.

முதன்மையானது மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவது. இனவாத சக்திகளை முறியடிப்பது.

மனித உரிமைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பதோடு மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் சக்திகளை தயவு தாட்சணியமின்றித் தண்டிப்பது.

எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வொன்றை கண்டுகொள்வதற்கான முயற்சியில் இதய சுத்தியுடனும் திறந்த மனத்துடனும் முழு மூச்சுடன் செயல்படுவது.

"கூட்டத்தில கூடி நின்று கூடிப் பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே நாளில் மறப்பாரடி"

## அன்பார்ந்த நண்பர்களுக்கு

3ம் பக்கத் தொடர்ச்சி

எனவே சிவகுமாரனின் சைனட் என்பது சுயதியாகம் சம்பந்தப்பட்டது. புலிகளின் சைனட் குப்பியானது அப்பாவி இளைஞர்களை அநாவசியமாகச் சாகடிக்கும் குணாம்சம் கொண்டது என்ற வேறுபாட்டைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

சிவகுமாரன் ஒரு தனிவரலாறு. அதனை முழுமையாகச் சொல்ல இந்தக் கடித அளவு இடம் தரவில்லை. தகவல்கள் பலவற்றை உள்ளடக்க நினைக்கிறேன் அதற்கும் முடியவில்லை. இன்னொரு சந்தர்ப்பத்தில் முயற்சிக்கிறேன். அவரது வரலாறு இன்னமும் யாராலும் முழுமையாகச் சொல்லப்படவில்லை.

ஆனால் தமிழர்களின் போராட்ட வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு சிவகுமாரனின் வரலாற்றை முழுமையாகத் தெரிந்து புரிந்து கொள்வதும் அவசியமாகும். சிவகுமாரனின் அரசியற்காலம் ஒரு நீண்டகால வரலாறு அல்ல. நான்கு ஆண்டுகள் மட்டுமே கொண்டது.

ஆனால் அங்குதான் இந்த விதைகள் போடப்பட்டன. அங்குதான் இந்த விதைகள் முளைவிட்டன. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள்.

அன்றைக்கு சிவகுமாரன் இறந்த வேளை, கடைகளை அடைப்பித்தோம், ஹர்த்தால் என்றோம், எங்கும் கறுப்புக் கொடிகள். யாழ்ப்பாணம் எங்கும் அவரின் மரணம் சொந்த வீட்டு விடயமானது. அவரின் மரணச் சடங்கை தமிழர்களின் போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பும் எழுச்சி நிகழ்ச்சியாக ஆக்கினோம். அவரின் சிதையில் திட்டமிடக்கையில் அழுது குமுறினோம்.

இருபத்தொன்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. எத்தனை ஆயிரம் போராளிகள் கொல்லப்பட்டு விட்டார்கள். எத்தனை நூற்றுக்கணக்கான போராளிகள் சிதைக்கே வராமற் போய்விட்டார்கள்.

ஆனால் விளைவு. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போலானது. அழிவுகளுக்கும் இழப்புக்களுக்கும் அர்த்தமில்லாமற் போய்விட்டது.

இவை விரக்தியின் வார்த்தைகளல்ல. ஒரு விமர்சனப் பார்வை. போலித்தனமான வாயுகளுக்குள் ஒழிந்து கிடக்கும் அந்த நம்பிக்கை நட்சத்திர ஒளியைக் காணுவதற்குத் தெளிவான கண்ணோட்டம் வேண்டும். இடைவிடா முயற்சி வேண்டும்.

இப்படிக்கு
உங்கள் அன்பு நண்பன்
அ. வரதராஜப்பெருமாள்.

## திருமலை அகதிமுகாம் அவலம்

திருமலை அலஸ் தோட்டத்தில் அமைந்துள்ள அகதி முகாமில் வாழும் மக்கள் பெரும் அவல நிலையையே எதிர்நோக்குகின்றார்கள். அண்மையில் வீசிய சூறாவளிக்காற்றினால் வீடுகளின் கூரைகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன.

இவைகளில் அதிகமான வீடுகள் இன்னமும் திருத்தி அமைக்கப்படவில்லை. மலசல கூடங்கள் கூரை விரிப்பு இல்லாமல் திறந்த வெளியாகக் காணப்படுகின்றன. இங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 1600க்கு மேற்பட்டோர் வாழ்கின்றனர். பாடசாலை நூல் நிலையம் என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன. நிர்வாகத்தால் வழங்கப்படும் நிவாரண உலர் உணவு பொருட்களின் நிறை குறைவாக வழங்கப்படுவதாக மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

கடந்த மூன்று மாதங்களாக சீனி வழங்கப்படவில்லையாம். இந்த முகாமில் காணப்படும் ஐந்து பொதுக் கிணறுகளைத்தான் அங்குள்ள அனைவரும் பாவிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும், பெண்கள் குளிக்கும் இடங்களுக்கு மறைப்பு கூடாரங்கள் கூட அங்குள்ளவர்கள் அமைத்துக் கொடுக்க முடியாதவர்களாகவும், தாமாக செய்துக்கொள்ள முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இந்த முகாமில் கடந்த நான்கு வருடங்களாக மின்சார வசதியில்லாமல் பெரும் சிரமத்தின் மத்தியில் மக்கள் வாழ்கின்றார்கள். படிக்கும் மாணவர்கள் இரவு வேளைகளில் குப்பி விளக்குகளின் படிக்க வேண்டியிருக்கிறது.

இந்த முகாம் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தாமதியாது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். இது சம்பந்தமாக முகாம் நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களுடன் பல தடவைகள் பேசியும் பலன் கிடைக்கவில்லையாம். இது போலவே திருமலை நிலாவெளியில் அமைந்துள்ளன. அகதி முகாமில் 116 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இவர்கள் வன்னி கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து அகதிகளாக வந்தவர்களாவர். இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டாலும் குறிப்பிட்ட சில பொருட்களைத் தவிர வேறு எதுவும் வழங்கப்படுவதில்லையாம். இங்கும் பெருமளவு சுகாதார சீர்கேடுகள் காணப்படுகின்றதாம்.

**திருமலை சிவம்**


**தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!**

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 27118

141A, மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON


படிப்பகம்

www.padippakam.com



# அன்பார்ந்த நண்பர்களே!

# அன்பார்ந்த நண்பர்களுக்கு

அ. வரதராஜப்பெருமாள்

## எழுதும் கடிதம் ~ 10

இலங்கையில் இப்போது சமாதானத்தின் பாதை இருண்டு போய்க் கிடக்கிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 'இதோ பேச்சுவார்த்தைக் கதவுகள் தட்டப்படுகின்றன', 'சமாதானத்தின் மணியோசை கேட்கிறது', 'நோர்வேயின் விசேட தூதுவர் ஜனாதிபதி சந்திரிக்காவுடன் பேசி இணக்கத்துக்கு வந்து விட்டார்!, இதோ காட்டுக்குச் செல்கிறார்', 'அடுத்த வாரம் பேச்சுவார்த்தை ஆரம்பமாகிறது' இவ்வாறு அரசாங்க சார்பு ஊடகங்களும் அரசாங்க எதிர்ப்பு ஊடகங்களும் கிரிக்கெட் நேர்முக வர்ணனை போல மக்களுக்கு செய்திகளையும் அபிப்பிராயங்களையும் அள்ளிக் குவித்தன.

சொல்ஹெய்மின் முயற்சிகள் தடைப்பட்டு விட்டதால் இப்போது நோர்வே வெளிநாட்டு அமைச்சரே நேரடியாகத் தலையிட்டுப் பார்க்கப்போகிறார். அதுவும் எங்கு செல்லுமோ இங்கும் எதுவும் தெளிவாக இல்லை. பேச்சுவார்த்தை மற்றும் சமாதானத்தின் சாத்தியப்பாடுகள் பற்றி விமர்சனக் கண்ணோட்டத்தில் பல கேள்விகளையும், சந்தேகங்களையும் எழுப்பிய என்னைப் போன்றோரை இங்கு பலர் சமாதானத்தின் விரோதிகள் போலப் பார்த்தார்கள்.

நான் ஏற்கனவே முன்னொரு கடிதத்தில் கூறியுள்ளபடி இங்கு பெரும்பாலோர் உண்மைகளைப் பார்க்க, பேச, கேட்கத் தயாராக இல்லை. போலியான கற்பனைகளில் வாழ்கிறார்கள். மற்றவர்களை போலியான மாயையில் வாழும்படியும் அவற்றை நம்பும்படியும் நிர்ப்பந்திக்கிறார்கள்.

தமிழர்கள் பொய், போலித்தனம், தங்களைத் தாங்களே மாயைக்குள் வைத்திருத்தல், அரசியல் தீர்வுக்கு நடைமுறைக்கொவ்வாத கற்பனைகளைக் கூறுதல் என்பவற்றிலிருந்து எப்போது விடுபடுகின்றார்களோ அப்போது தான் இந்தத் தமிழ்ச் சமூகம் உண்மையான சுதந்திரம்,ஜனநாயகம்,சமாதானம், அபிவிருத்தி என்பவற்றை அனுபவிக்கும் நாள் ஆரம்பமாகும்.

அன்பு நண்பர்களே!

இந்த யூன் மாதம் கடந்த காலங்களை மீட்டிப்பார்க்க தூண்டுகிறது. ஏனெனில் இந்த மாதம் 5ம் திகதி இலங்கையின் வரலாற்றிலும், தமிழர்களின் வரலாற்றிலும் மிகப்பிரதான இடத்தைப் பெறுகின்றது.

இந்த நாளில்தான் 1947ம் ஆண்டு இந்த நாட்டின் தொழிற்சங்கங்கள் அனைத்தும் மற்றும் இடதுசாரி சக்திகளும் ஒருங்கிணைந்து நின்று பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக நடத்திய போராட்டத்தின்போது கொழும்பில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் முன்னணியில் சென்ற தோழர் கந்தசாமி அவர்கள் பொலிஸின் துப்பாக்கிக்குப் பலியாக்கப்பட்டார்.

பின்னர் இந்த நாளில் தான் 1956ம் ஆண்டு திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் சிங்களம் மாத்திரமே அரசாங்க மொழி என சட்டமாக்கியது. அதனை எதிர்த்து பாராளுமன்றத்துக்கு முன்னால் தமிழர் பிரதிநிதிகள் ஒரு சத்தியாக்கிரக மறியல் போராட்டம் நடாத்தினார்கள். சத்தியாக்கிரகிகள் மீது அங்கு வந்த காடையர்கள் கல்லுகளால் அடித்தார்கள், சில காடையர்கள் சத்தியாக்கிரகிகளைச் சுற்றிவர நின்று அவர்கள் மீது சிறுநீர் கழித்தார்கள். சில சத்தியாக்கிரகிகளை அன்றைய பாராளுமன்றத்துக்குப் பக்கத்தில் இருக்கும் பேராற்றில் தூக்கி எறிந்தார்கள். அந்த போராட்டத்தில் மண்டை உடைக்கப்பட்ட நிலையில் அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றம் சென்றமையையும், தமிழர்களுக்கு எதிராக அரசு செயற்பட்ட விதம் பற்றி அவர் ஆற்றிய உரையையும் இலங்கையின் அரசியல் வரலாறு சொல்லும் அவற்றை இங்கு விபரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

பின்னர் இதே ஆனி மாதம் 5ம் திகதி 1974ம் ஆண்டு எமது அன்பு நண்பன் சிவகுமாரன் இறந்தமையை, தமிழர்களின் போராட்ட வரலாற்றில் அவரது மரணம் ஒரு திருப்புமுனை ஏற்படுத்தியமையை நாம் நினைவுகூருவது பொருத்தமானதாகும்.

அந்த நாட்களையும் இன்றைய நிலைமைகளையும் நினைத்துப் பார்க்கிறேன். 1987ம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்கள் பலர் துரோகிகளெனச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரது தமிழ்க் காங்கிரஸ்காரர்களும் பத்து லட்சம் தமிழர்களை விற்ற துரோகிகள் என ஊரே தூற்றி நின்றது.

40ஆண்டுக்காலம் தமிழர்கள் மத்தியில் துரோகிகளாக இருந்த பொன்னம்பலம் குடும்பம் நாலு நாட்கள் புலிகளுக்கு வக்காலத்து வாங்கியதால் அவர்கள் மாமனிதர்கள் ஆனார்கள். அந்தத் துரோகக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இப்போது தியாகிகளாகி விட்டார்கள். அவர்களை நாக்கூசாமல் பாராட்ட நாலு தமிழ்ப்பெரியார்களும் உள்ளனர்.

ஆனால் நாற்பது வருடங்களுக்கு மேல் தனது குடும்பம், தனது அப்புக்காத்துத் தொழில், வசதியான வாழ்க்கை என்று பாராமல் தமிழர்களுக்காக உழைத்த அமிர்தலிங்கம் அவர்கள் துரோகியெனச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது நிழல் அரசியலில் வளர்ந்த அவரது கட்சிக்காரர்கள் கூட இன்று தமது பாராளுமன்றப் பதவிகளுக்காக அவரைப் பற்றிய உண்மைகளைக் கூறத் தயங்கி நிற்கின்றனர்.

தமிழரசுத் தந்தை என்று அழைக்கப்பட்ட திரு.செல்வநாயகம் அவர்கள் இந்தப் புலிகளெல்லாம் தலையெடுப்பதற்கு முதலிலேயே வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டு இறந்த படியால் இன்று அவரது கட்சிக்காரர்கள் நினைவுத் தூணுக்கு அஞ்சலி செய்கிறார்கள், வருடாவருடம் நினைவுக் கூட்டம் நடாத்துகிறார்கள். அந்தச் செல்வநாயகம் அவர்களும் காலம் தப்பி புலிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தால் இன்றைக்கு அவரும் துரோகியாகியிருப்பார்.

1981ம் ஆண்டு இதே யூன் மாதம் முதலாம் திகதி அதிகாலையில் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களின் தலைமையில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. அதிலிருந்த சுமார் ஒரு லட்சம் விலை மதிப்புமிக்க புத்தகங்கள் எரிந்து சாம்பலாகின. இன்று அதே ஐ.தே.க. காரர்களுடன் புலிகள் கைகோர்த்து நிற்கிறார்கள்.

1977ம் ஆண்டுக்கு முன்னர் தமிழர்களின் "துரோகி"யாக இருந்த பேராசிரியர் சிவத்தம்பி போன்றோர் புலிகளுக்கு வக்காலத்து வாங்குவதால் இன்று அவர்கள் மாமனிதர்களாக இருக்கிறார்கள் அவர்கள் உண்மைகளை உள்ளபடி சொல்லுவாராக இருந்தால் எப்போதோ புலிகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி துரோகியாகியிருப்பார்கள்.

ஆனால் எந்தக் கட்டத்திலும் தன் மனச்சாட்சிக்கு விரோதமாய் பேசவோ எழுதவோ தயாராக இல்லாததால் வரலாற்றுப் பேரறிஞர் இந்திரபாலா மற்றும் பேராசிரியர் சீலன் கதிர்காமர் போன்றோர் நாட்டைவிட்டே ஓட வேண்டியவர்களானார்கள்.

புலிகளுக்கு தலை குனிந்து சேவகம் செய்யத் தயாராக இருக்காதபடியால் தமிழ் பேரறிஞர் பேராசிரியர் வித்தியானந்தன் யாழ் பல்கலைகழகத்தை விட்டுத் துரத்தப்பட்டார். அதனால் மனமுடைந்து படுத்தவர் எழும்பவேயில்லை. பேராசிரியர் கைலாசபதி நேரகாலத்தோடு இரத்தப் புற்று நோய் அவரைக் கொண்டு சென்றபடியால் இன்னமும் அவரின் அறிவுத்திறன் பற்றி பேசுகிறார்கள். அவர் இன்று உயிரோடு இருந்திருந்தால் எனக்கு நிச்சயமாகத் தெரியும், அவரும் இன்று இந்தப் புலிகளின் துரோகிப் பட்டத்தோடு வேற்று நாட்டிலேயே இருந்திருப்பார்.

ஒரு காலத்தில் தமிழ் மக்களின் நியாயமான அடிப்படை உரிமைகளுக்கான போராட்டத்தைக் கூட "வகுப்புவாதக் கூக்குரல்" என மார்க்சிச-லெனினிச சட்டப் புத்தகங்களைப் புரட்டி எமக்கெதிராக மக்கள் மத்தியில் சாதிவாதம் பேசிய சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் சிலர் இப்போது தமிழ்த் தேசிய வாதத்தின் முன்னணிப் பிரதிநிதிகளாக, புலிகளின் தத்துவார்த்த வக்கீல்களாக கொழும்பு வீதிகளில் நடமாடுவதைக் காணமுடிகின்றது.

ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. துரையப்பா இன்று உயிரோடு இருந்திருந்தால் அவர் இப்போது புலிகளின் தீவிர ஆதரவாளனாக ''மாமனிதன்'' பட்டமும் பெற்று தமிழினத்தின் ஓர் அரசியல் தலைவனாக இருந்திருப்பார்.

தமிழ் மக்களின் மத்தியில் தியாகிகள் யார் துரோகிகள் யார் என்பது அவரவரது தியாகங்களை வைத்தோ துரோகத்தனங்களை வைத்தோ மதிப்பிடப் படுவதில்லை. மாறாக பிரபாகரனே தனது அவ்வப்போதைக்கான வசதிகளுக்கு ஏற்ப தீர்மானிக்கிறார். வன்னிக் காட்டில் இருந்து கொண்டு இந்த சமூகத்தில் உள்ள பெரியோர்கள் மற்றும் புத்திஜீவிகள் பெரும்பாலானோரின் எண்ணங்களையும் நடப்புக்களையும் தீர்மானிக்கும் அளவுக்கு பிரபாகரனின் பாசிச வல்லமை தமிழ்ச் சமூகத்தில் ஆழமாக விரிவடைந்திருக்கிறது என்ற உண்மையை நாம் மறைத்துவிடமுடியாது. இது மிகவும் பேராபத்தானதாகும். இதில் பெருமைப்படுவதற்கோ அல்லது பாராட்டுவதற்கோ எதுவுமில்லை. இது சமூகத்தை உள்ளிருந்தே அழிக்கும் கொடூரமான நோய் என்பதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். குஷ்டரோகிக்கு சொறிவது சுகத்தைக் கொடுக்கும். அதற்காக குஷ்டரோகமும், சொறியும் உடலுக்குச் சுகத்தைக் கொடுக்கும் என்று சொல்லக் கூடாது. அப்படிப் பட்டதுதான் இன்று எமது சமூகத்தில் நிலவும் கொடூரமான நோயும்.

இன்றைய இந்த நிலைமைகளைப் பிழைப்புவாதிகளின் தவிர்க்கமுடியாத தந்திரம் என்று சொல்வதா அல்லது திட்டமிட்ட ஏமாற்றுப் பேர்வழிகளின் இயல்பான நடவடிக்கைகள் என்பதா? எவ்வாறாயினும் தன்னைத்தானே ஏமாற்றும் நிலையிலிருந்து இலங்கைத் தமிழினம் தன்னைத்தானே மீட்டுக்கொள்ளாத வரை அதன் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும். அதையாராலும் காப்பாற்ற முடியாது.

அன்பிற்கினிய நண்பர்களே!

இந்தக் கடிதத்தில் சிவகுமாரனைப் பற்றி சில வாக்கியங்களை எழுத விரும்புகிறேன். ஆஜானுபாகுவான இளைஞன் என்பார்களே! அதற்கு சிறந்த எடுத்துக் காட்டு சிவகுமாரன். நாவில் பொய்யிருக்கவில்லை, அஞ்சா நெஞ்சுரமும், நேர்மைத் திறனும் கொண்ட அக அழகன் மட்டுமல்ல நல்ல உடற்கட்டான புற அழகனும் கூட. எதிரியையும் கவரும் நல்ல குணங்கள், சொல்லிலும் நடையிலும் நல்ல பழக்க வழக்கங்கள்.

தாய் சகோதரர்கள் மீது பாசம், பெரியோர் ஆசிரியர்களைக் கனம் பண்ணல், ஒரு நல்ல இனிய நண்பன். எந்த வேளையும் சிரித்த முகம், ஆத்திரத்திலும் மரியாதை தவறாமை, இலட்சிய புருஷ லட்சணங்கள் பல நிறைந்த ஒரு மனிதன். தமிழ், தமிழர்கள், தமிழர்களின் சுதந்திரம் என தன்னலமற்று வாழ்ந்த ஒரு சிறந்த இளம் தலைவன். இது வெறும் புகழ்ச்சியல்ல. சிவகுமாரனுடன் நேரடியாகப் பழகிய அத்தனை நண்பர்களது அபிப்பிராயம் இதுவே என்பதில் எனக்கு ஐயமில்லை.

இதையெல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்றால் பிற்காலத்தில் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் ஆயுதம் தூக்கினார்கள். ஆயுதம் தமது கையில் ஏறிய அடுத்த கணமே தமக்கு எல்லாம் தெரியும், தம்மை மிஞ்சி சமூகத்தில் யாரும் இல்லை என்று நினைக்கத் தொடங்கியவர்கள் பலர். கள்ளன், கயவன், பட்டப் பகலில் ஊரைக் கொள்ளையடித்து அவற்றை நடு ரோட்டில் போட்டு விற்றுப் பணம் பண்ணியவர்கள், பெண்கள் விடயத்தில் ஒழுக்கக் கேடானவர்கள், ஊரை ஏமாற்றி ஒளிந்து நின்று சிகரட்டும் சாராயமும் குடிப்பவர்கள், நல்ல வார்த்தையே வாயில் வராத தூஷண பூஷணங்கள், தனக்கொரு நியாயம் ஊருக்கொரு நியாயம் எனச் செயற்படுவோர் என வகைப்பட்டவர்களெல்லாம் இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் தலைவர்களாக இருந்து போனார்கள். இன்னமும் பலர் தலைவர்களாக இருக்கிறார்கள். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கையில் சிவகுமாரன் போன்ற இலட்சிய புருஷனை முதற்தியாகியாகக் கொண்ட எங்கள் போராட்டம் இன்று எங்கே போய் நிற்கின்றது என்ற கவலை மனதை நிறைத்து நிற்கின்றது.

தமிழர்களின் அரசியலை இன்று பொய்யர்களுமே போலிகளுமே ஆளுகின்றனர். ஆனால் நல்லவர்களும் உண்மையானவர்களும் மட்டும்தான் ஒரு போராட்ட இயக்கத்தில் இருக்க வேண்டும் என்ற கொள்கையைச் சிவகுமாரன் கொண்டிருந்தார். இதற்கு சிறந்த உதாரணம், செட்டி என்று அழைக்கப்பட்ட தனபாலசிங்கத்தை அவரின் ஒழுக்கமின்மை காரணமாக தனது இயக்கத்தில் சேர்த்துக்கொள்ள மறுத்தவர் சிவகுமாரன்.

இந்தச் செட்டி சிவகுமாரனுக்கு முன்பின் தெரியாத ஆளல்ல. செட்டி தமிழ் மாணவர் இயக்கத்தின் வன்முறை நடவடிக்கைகளில் செயற்பட்டு பொலிஸால் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர். 1974ம் ஆண்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து தப்பிவந்த செட்டியும் அவரது மைத்துனரும் சிவகுமாரனுடன் சேர்ந்து அவரின் தலைமையின் கீழ் செயற்படக் கோரினர்.

இந்தச் செட்டியென்பவர் சிறிய வயதிலேயே பாலிய வயதுக் குற்றங்களுக்காக மக்கோனா என்னும் இடத்தில் உள்ள சிறுவர் நன்னடத்தைச் சிறையில் வளர்ந்தவர். அங்கிருக்கையில் குத்துச் சண்டை,கராட்டி போன்ற விளையாட்டுக்களில் பயிற்சி பெற்றார். வளர்ந்து சிறையிலிருந்து விடுதலையாகி வந்தபோதும் அவரது அடிப்படைக் குணத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. களவு, கொள்ளையடித்தலே தொழிலாக இருந்தது. அவற்றைப் பிடிபடாமல் செய்வதில் திறமைசாலியாக இருந்தார். சிறந்த மோட்டார் வாகன ஓட்டுனர். குறி தவறாது துப்பாக்கி சுடுவதிலும் வல்லவர். இதனாலேயே அன்றைய தமிழ் மாணவர் பேரவைத் தலைவர்கள் தமது வன்முறை நடவடிக்கைகளில் அவரைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தார்கள்.

இந்தச் செட்டியே பின்னர் புலிகளை ஸ்தாபித்தவரும், புலிகளின் முதலாவது தலைவருமாவார். செட்டியே தமிழர்களின் போராட்டத்தில் முதலாவது சகோதரப் படுகொலையைச் செய்த ஆள். கருத்து வேறுபாடு ஏற்பட்டாலோ அல்லது இயக்கத்தில் இருந்து யாரும் பிரிந்தாலோ அவர்களைக் கொலை செய்துவிட வேண்டும் என்ற கலாச்சாரத்தைத் தமிழர் போராட்டத்தில் அறிமுகம் செய்து வைத்ததும் செட்டியே. பிரபாகரனின் குரு, சித்தாந்த வழிகாட்டி செட்டியே என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

சிவகுமாரன்தான் முதன்முதலில் பொலிஸாரின் சுற்றி வளைப்புக்கு உள்ளானபோது சைனைட் உட்கொண்டு இறந்துபோன முதலாவது போராளி என்பதால் அவரைப் புலிகள் தங்களோடு அடையாளம் காட்டப் பார்க்கிறார்கள். ஆனால் உண்மை தலை கீழானதாகும்.

அன்றைய காலகட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு எண்ணிக்கை கொண்டவர்களே. அப்போது ஒருவர் பொலிஸில் அகப்பட்டுக் கொண்டால் பின்னர் விசாரணையின் போது மற்றவர்களின் பெயர் விலாசங்களையும் கூறி விடுகின்ற நிலைமை இருந்தது. இதனால் அந்த இயக்கமே ஸ்தம்பிதமாகி விடுகின்ற நிலைமை ஏற்பட்டது.

இந்த அடிப்படையிலேயே சிவகுமாரன் தான் மட்டும் அந்த சைனட் குப்பியை வைத்துக் கொண்டு, தற்செயலாக யாராவது பொலிஸில் அகப்படும் நிலைமை ஏற்பட்டால் தன்மீதே எல்லாப் பழியையும் போடும்படியும், தனக்குத் தான் எல்லாம் தெரியும் என்று கூற வேண்டும் என்றும், தன்னை அரச படைகள் உயிரோடு பிடிக்கமுடியாது. அதற்காக தனது சட்டைப் பைக்குள் எப்பொழுதும் சைனட் குப்பி இருக்கும் என்று விளக்கம் கொடுத்தார்.

ஆனால் பிரபாகரனோ 1983க்குப் பின்னர் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் சேரத் தொடங்கியதன் பின்னரும் தான் இந்தியாவில் பாதுகாப்பாக இருந்து கொண்டு இளைஞர்களின் கழுத்தில் சைனட் குப்பியைக் கட்டிவிட்டமை வெறுமனே செத்துப் போகிறவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுகின்ற ஒன்றாக இருந்ததே தவிர. மற்றப்படி அடிப்படையில் வேறெந்த நோக்கங்களுக்கும் அது பயனுடையதாக இருக்கவில்லை.

தொடர்ச்சி 2ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# சக்கடத்தார் – அம்மான் அரட்டை அரங்கம்

சக்கடத்தாரும் அம்மானும் ஏறத்தாழ கால் நூற்றாண்டிற்கு பிறகு யாழ் மண்ணை விட்டு கப்பல் மூலம் திருமலை வந்து அங்கிருந்து கொழும்பு மண்ணில் காலடி எடுத்து வைத்து விட்டார்கள்.

கொழும்பில் தமிழரின் தலைநகரமாம் வெள்ளவத்தையில் கடல் புறமாக அமைந்துள்ள 47வது ஒழுங்கையில் அம்மானின் மருமகள் வீட்டில் சக்கடத்தாரும் அம்மானும் அடைக்கலம் எடுத்துக் கொண்டனர். வந்தகளைப்பில் இருவரும் சற்று இளைப்பாறி புதிய சூழலில் சங்கமமாகி தம்மை சகஜப்படுத்திக் கொண்டார்கள்.

சக்கடத்தார்:- அப்ப அம்மான் ஒரு மாதிரி கொழும்பில காலடி எடுத்து வைச்சிட்டம்.

அம்மான்:- ஓமோம் ஆடுமாட்டை அடுக்கிறது, கிழங்கு அடுக்கி அனுப்பிறது. எண்டெல்லாம் முந்திக் கேள்விப்பட்டதை இப்பதான் அனுபவிச்சுப் பார்த்தன். ஊருக்குத் திரும்பிப்போன உடனே நல்லூர் ஆறுமுகத்தானுக்கு 103 தேங்காய் உடைக்க வேணும்.

சக்கடத்தார்:- அதென்ன கணக்கு 103? 108 தேங்காய் எண்டெல்லோ உடைக்கிறவையள்.

அம்மான்:- இப்ப நாட்டில என்ன வெண்டான்ன கையிக்க பொத்தாம நடக்குதே! நல்லூர்க் கந்தனும் நம்ம ஊரான்தானே! அவருக்கும் கணக்கில இல்லாமல் அஞ்ச விடவேணும். ஏன் பிறகு பிசக. குடுக்கிறதக் குடுத்திட்டாத்தான் காரியம் நடக்கும்.

சக்கடத்தார்:-அது ஏன் காணும்?

அம்மான்:- இங்க பாரும் எங்கட காலத்துல. ஆசுப்பத்திரியில ஆரோ ஒன்றிரண்டு பேர் லஞ்சம் வாங்குவாங்கள். அப்ப கச்சேரியில காரியம் நடக்க வேணுமெண்டால் ஒன்றிரண்டு பேருக்கு மட்டும்தான் லஞ்சம் கொடுக்கோணும். இப்ப அப்பிடியே இருக்கு லஞ்சம் வாங்காத ஒரு அதிகாரியைக் காண முடியுதே. டாக்குத்தர்மார் லஞ்சம் எண்டு சொல்லாம வேற வேற பேரில ஆக்கள உறிஞ்சுகினம். கடைக்காரர்கள் முழுக்க கள்ளக்கடத்தல்க்காரர் மாதிரித்தான் வியாபாரம் பண்ணுகினம். ஊழல் மோசடியென்டில்லாத ஒரு அரசாங்க இலாக்காவை இப்ப காணமுடியுமே. விடுதலை எண்டு தொடங்கி கடைசியா ஊரையும் சனங்களையும் தறுதலைகளாக்கிப் போட்டாங்கள்.

சக்கடத்தார்:- அது சரி இப்ப கொழும்புக்கு விஸா எடுத்து வந்தாச்சு இனி என்ன வேலையள்?

அம்மான்:- முதல் விஷயம் நல்லூர் தேரண்டைக்கு கியூவில நிண்டு அர்ச்சனை செய்யிறதிலும் பார்க்க கஸ்டமான விஷயம் ஒண்டு இருக்காம்.

சக்கடத்தார்:- அது என்ன வேலை காணும்?

அம்மான்:- அதுதான் லண்டனுக்கு ஜேர்மனிக்கு அகதியாப் போறவையள்-தாங்கள் அகதியா வந்துட்டம் எண்டு சொல்லி அங்கத்தை பொலிஸில் பதிஞ்சு பதிவுக்கார்ட் எடுக்கிற மாதிரி எங்கட நாட்டிலேயும் வடக்கு-கிழக்கில இருந்து கொழும்புக்கு வாரவையெல்லாம் வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை எண்டு பொலிஸ் ஸ்டேசனிற்குப் போய் பதிஞ்சு ரிப்போர்ட் எடுத்து வைச்சிருக்க வேணும். உது இல்லாட்டி உங்க இருக்கேலாது, படலைக்கு வெளியில கால் வைக்கேலாது. ரவுண்ட் அப்பில தூக்கிக் கொண்டு போய் எங்கையாவது ஒரு பொலிஸ் டேசன்ல போட்டிருவாங்கள். பிறகு வெளியில வாரது சுவீப் ரிக்கற் விழுகிற மாதிரித்தான். அதுக்கிடையில இதுக்கெண்டு காவலிருக்கிற தர்மலிங்கங்கள் இந்தா எடுத்து விடுகிறன் எண்டு சொல்லி 5000, 10.000த்தைக் கறந்து விடுவாங்கள்.

சக்கடத்தார்:- உங்க பொலிஸில போய் இந்த வேலையெல்லாம் செஞ்சு தர எங்கட ஆட்கள புரோக்கர்மாரா இருக்கினமாமே பிறகென்ன அம்மான் பிரச்சினை. அவையளைப் பிடிச்சு பொலிஸ் வைரவரின்ற உண்டியல்ல போடுற மாதிரிப் போட்டா இந்தப் பதிவு வேலையெல்லாம் சுகமா முடிஞ்சிடும்தானே.

அம்மான்:- வைரவற்ற உண்டியலோ! அவையிட கைகள் திருப்பதி உண்டியல் மாதிரி. அதிருக்கட்டும் மருமகன் சுவிசில இருந்து உண்டியல் அனுப்பியிருக்கிறார். அது விஷயமா "பெட்டா"வில போய்க் கதைக்க வேணும். பிறகு மகளின்ற மாமியாரை "தெல்மான்" எண்டொரு ஆஸ்பத்திரியில வைச்சிருக்கினமாம். அதையும் போய்ப் பார்க்க வேணும். இப்பிடி எனக்குக் கனக்க வேலையள் இருக்கு. அது சரி சக்கடத்தார் நீங்கள் என்னென்ன வேலையள் வைச்சிருக்கிறியள்?

சக்கடத்தார்:- முதல் வேலை மருமோன் மகேசனப் போய்ப் பார்க்கிறதுதான். அவரைப்பார்த்தா பிள்ளையார் சிவன் பார்வதியைத் சுத்தி வந்தமாதிரி எல்லாம் சரிவரும். அவருக்கு இங்க எல்லாற்ற தொடர்பும் இருக்கு. ஆள் சரியான வேலைகாரன். நூல் நுழைய முடியாத இடத்துக்கையெல்லாம் ஆள் நுழைஞ்சு போய் வந்திருவார்.

அம்மான்:- ஓ மகேசனே! அவற்றை கெட்டித் தனத்தை நீங்க சொல்ல வேணுமே. அவரைப் போல வியாபாரம் பண்ண முடியுமே. அவர் சந்திரனையே கண்ணாடியில காட்டி விலை பேசக் கூடிய கெட்டிக் காரனெல்ல. இல்லயெண்டால் இந்தச் சனம் இந்தப் பாடுபடேக்க அஞ்சு வருசத்துலெ கோடீஸ்வரனான ஆளெல்லே. கப்பலோட்டிய தமிழன் பரம்பரை, புஷ்பக விமானம் ஓட்டிய ராவணன் பரம்பரை ஆகவே காட்டை ஆளுபவர்களைப் பிடித்து நாட்டுக்கு ரோட்டைத் திறப்பேன் எண்டு சொல்லி எம்.பி ஆன கெட்டிக்காரனல்லே. அவர் சிங்களவனுக்குச் சிங்களவனாய், தமிழனுக்குத் தமிழனாய், முஸ்லிமுக்கு முஸ்லிமாய் தன்னை மாற்றி தனது காரியங்களைப் பாக்கிற கெட்டிக்காரனெண்டு தெரியாதே.

சக்கடத்தார்:- உமக்கேன் காணும் வயிறு எரியுது?

அம்மான்:- இல்ல பாரும். அவற்றை கெட்டித் தனங்களைத்தான் சொல்லுறன். சரி உங்க மச்சாள் வந்துட்டா. அவவை கேட்டுட்டு நம்மட வேலையளைப்பாப்பம்.

சக்கடத்தார்:- வெய்யே மாமி இன்டைக்கு உங்கட புரோகிராம் என்ன?

மாமி:- இண்டைக்கு என்ன கிழமை?

அம்மான்:- வெள்ளிதான்!

மாமி:- பத்தரைக்கு 7வது சனல்ல ராஜேஸிண்ட் படம் ஒண்டிருக்கு. பதினொரு மணிக்கு 4வது சனல்ல ரஜனியிட படம். ரெண்டு மணிக்கு ஜெமினின்ற பழைய படம் சுமைதாங்கி. 4மணிக்கு டொப் டென் போடுவாங்கள், அஞ்சரை மணிக்கு கிருஷ்ணதாசி சீரியல் பிறகு 6 மணிக்கு கங்கா யமுனா சரஸ்வதி ஆறரைக்கு ஆலயம். 7 மணிக்கு கோகிலா எங்கே போறாள், ஏழரைக்கு புஸ்பாஞ்சலி, எட்டரைக்கு வாழ்க்கை அதோட எல்லாம் முடிஞ்சு போயிடும். பிறகு இங்கிலிஸிலதான் காட்டுவாங்கள். அதேன் எங்களுக்கு.

அம்மான்:- அப்ப மாமி அவ்வளவு பிஸி. அவவிட்ட உதவி கேட்டு வேலையில்ல.

சக்கடத்தார்:- அதுசரி இங்க கொழும்பில இந்து, சைவம், தமிழ், அனுமான், கம்பன் எண்டு எத்தனையோ சங்கங்களும் பெரிய மனுஷர்களும் இருக்கினமல்லோ. அவையள் எங்கள மாதிரி இடம் வலம் தெரியாததுகளுக்கு உதவ மாட்டினமே.

அம்மான்:- அதுசரிதான் சக்கடத்தார். அவையள அவ்வளவு லேசுப்பட்ட ஆட்களெண்டே நினைச்சீர். அவையள் சரியான பிஸியான ஆட்கள். அவையள் எங்களக் கடவுளிட்ட கூட்டிக் கொண்டு போகத்தான் உதவுவினம். மனுசரின்ற உலக விவகாரங்களெல்லாம் அவர்களுக்குப் பொருட்டல்ல.

சக்கடத்தார்:- கொழும்பில எங்க பார்த்தாலும் தமிழ்சனமாக் கிடக்குது. ரெண்டு லட்சத்தைத் தாண்டியிருக்கும் என்ன.

அம்மான்:- ஒரு கணக்குச் சொல்றன் சக்கடத்தார் கூட்டிப் பாத்திரெண்டால் எங்கட தமிழரிண்ட பெருமை புரியும். யாழ்ப்பாணத்தில இப்ப அஞ்சு லட்சம் பேர்தான் இருக்கினம். அதோட வடக்கில உள்ள ஏனைய மாவட்டங்கள்ல ஒரு நாலு லட்சம், கிழக்கில மொத்தமா ஒரு நால்ரை லட்சம் பேர் இருக்கினம். இதில அகதிகளாக நம்மட ஊர்களிலேயே ஒரு நாலு லட்சம் பேர் இருக்கினம். இதைவிட கொழும்பில இரண்டு லட்சம், இந்தியாவில ஒண்டரை லட்சம், கனடாவில மூண்டரை லட்சம், லண்டன்ல ஒரு லட்சம், பிரான்ஸ்ல ஒரு லட்சம், ஜேர்மனியில ஒரு லட்சம், சுவிஸ், நோர்வே, ஒல்லாந்து போன்ற மற்ற நாடுகள்ல மொத்தம் ஒருலட்சம், இதைவிட ஒஸ்ரெலியாவில இருக்கினம், அமெரிக்காவில இருக்கினம். பாத்தீரே எங்கட தமிழாக்கள் உலகம் முழுக்க தமிழப்பரப்புகினம் எண்டு.

சக்கடத்தார்:- எங்கட ஆக்கள் யூதர்கள் மாதிரி எண்டு சொன்னது இதைத்தானே. இவை இஸ்ரேயல் மாதிரி ஒரு தமிழ்ரேயல் உருவாக்குவினமே.

அம்மான்:- அது தெரியல்லே சக்கடத்தார். ஆனா! வேலுப்பிள்ளையரின்ற பெடியன் சுடலைரேயல் உருவாக்காம விடமாட்டனெண்டு நிக்கிறார். அதுக்க மலர்மாலை சாத்தி எம்.பி யாகிரலாமெண்டு கொஞ்சப் பேர் கொழும்பில காவலிருக்கினம். வெளிநாட்டில இருக்கிறவை அங்கே நிரந்தர பிரஜாவுரிமை கிடைக்கும் வரைக்குத்தான் ஊரைப்பற்றி அக்கறைப்படுவினம். ஈழ விடுதலையை நம்பி செத்ததுகளும் சாகிறதுகளும் தான் பாவம்.

சக்கடத்தார்:- என்ன அம்மான் கவலைப்படுறியளே!

அம்மான்:- வேறென்ன செய்ய. போனதுகளையும் நினைச்சு ஒண்டொண்டா தொடுத்து நினைச்சா நெஞ்சுதான் அடைக்குது. கொஞ்ச நேரம் படும். பின்னேரம் பாப்பம்.

padippakam

# காலவதியாகும் அமைச்சின் வாக்குறுதியும் காத்துக் கிடக்கும் இளைஞர் யுவதிகளும் - மன்னாரின் நிலை

1995 இல் இருந்து இலங்கையில் வறுமை ஒழிப்புத்திட்டம் சமுர்த்தி திட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதுவும், இன்றுவரையும் 20 மாவட்டங்களில் சமுர்த்தி திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருவது உண்மை விடயமாகும்.

மன்னார் மாவட்டத்தில் மட்டும் சமுர்த்தி வறுமை ஒழிப்புத் திட்டம் ஏன் அமுல் படுத்தப்படவில்லை என்று மன்னார் மக்கள் அங்கலாய்த்து நிற்கின்றனர். காரணம் புரியாமல் விழிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலகங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இக்கட்டுப்பாட்டுப் பகுதியில் 106 கிராம சேவகர் பிரிவுகளும் 14516 குடும்பங்களைச் சேர்ந்த 54613 பேர் இருக்கின்றனர். இவ்வளவு இருந்தும் மன்னாரில் ஏன் சமுர்த்தி திட்டம் அமுல்படுத்தப் படாமைக்கும், காலதாமதம் ஆக்குவதற்கும் என்ன காரணம்.

இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய வறுமைக் கோட்டிற்கு கீழ் மக்கள் வாழும் மன்னார். முதன்முதலில் சமுர்த்தி அமுல் படுத்தப்பட்டிருக்க வேண்டிய மாவட்டமும் இதுதான்.

ஆனால் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் விளைவாக மக்கள் ஏமாற்றம் அடைந்திருப்பதுடன் மன்னார் மாவட்டம் புறக்கணிக்கப் பட்டிருப்பதாகவும் கருதுகின்றார்கள்.

2000ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சமுர்த்தி வழங்குவதாகக் கூறி வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பல இளைஞர் சங்கங்களையும், மீனவர் சங்கங்களையும் கிராம முன்னேற்ற சங்கங்களையும் , பட்டதாரி சங்கங்களைய்யும் சந்தித்து வாக்குறுதிகளை அள்ளி வழங்கினார்.

மாதமோ எட்டு ஆகிவிட்டது. இதுவரையில் மன்னாரில் எவ்வித செயற்பாடும் நடக்கவில்லை. வன்னித் தேர்தல் தொகுதியில் பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் எவ்வித முன்னேற்றமோ, முயற்சிகளோ நடப்பதாக தெரியவில்லை என கடிதம் ஒன்றினை மன்னார் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கண்ணோட்டத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

# நாடகக் கருத்தரங்கு

சமூக கலை கலாசார பேரவை எதிர்வரும் 24-06-2001 அன்று காலை 9.00 மணிக்கு கொழும்பு-10 மாளிகாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்தில் நாடகக் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. கிழக்கு பல்கலைகழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கில்.

நாடகப் பிரதியாக்கம், நாடக நடிப்பு, நாடக நெறியாள்கை, மேடை நாடக நடனம், இசை, ஆடையலங்காரம், ஒப்பனை, ஒளியமைப்பு, மேடைவிதானிப்பு போன்ற தலைப்புக்களின் கீழ்,

கிழக்கு பல்கலைகழக நுண்கலை துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களான பாலகுமார், கே. விமலராஜா, சி. ஜெயசங்கர், சட்டத்தரணி கா. சிவபாலன் ஆகியோர் கருத்துரை வழங்குகிறார்கள்.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புகிறவர்கள் கடித மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

முகவரி :-
இல:- 17. புதிய சோனகத் தெரு, கொழும்பு -12 தொலைபேசி - 940818, 077-802339.

அஸீஸ் மன்றத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக் கப்பட்ட சமூக கலை கலாசார பேரவையின் புதிய நிர்வாகிகள் கலாபூஷணம், ஜே.பி.றொபட் (தலைவர்), ரி. செந்தில்வேலர் (உப-தலைவர்), எஸ். செல்வசேகரன், ஆர். ராஜசேகரன் (இணைச் செயலாளர்கள்), எஸ். கந்தையா ஜே.பி (பொருளாளர்), எஸ். சிறிதரன் (உப-பொருளாளர்), மொழிவாணன் (ஊடக செயலாளர்) கலாபூஷணம் கே.ஏ. ஜவாஹர் (பிரதான அமைப்பாளராகவும்), தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

www.padippakam.com



# அரசியல் கோரிக்கைகளும் - தமிழர்களின் குழறுபடியான அரசியல் வரலாறும்

இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டது போல இலங்கையின் அரசியல் வரலாற்றிலும் பண்டா - செல்வா ஒப்பந்தம் நடைமுறையில் நிறைவேற்றப்பட்டிருக்குமாக இருந்தால் இந்தியா ஒரு தேசமாக ஒருமைப்பட்டதைப் போல இலங்கையிலும் மொழிவேறுபாடுகள், இனவேறுபாடுகள், மதவேறுபாடுகள், பிரதேச வேறுபாடுகளை மிஞ்சிய வகையில் தேசபக்தியும் தேசத்தின் ஒற்றுமை, பாதுகாப்பு, முன்னேற்றம் என்பவை மீதான உணர்ச்சிகளும் அனைத்து மக்கள் மத்தியிலும் உணர்வு பூர்வமாக வளர்ச்சியடைந்திருக்கும்.

ஆல்(if) என்று போட்டு ஒரு வரலாற்றை ஆய்வு செய்வதில் பலனில்லை என்பர் அறிஞர். எனினும் இங்கு தவறவிடப்பட்ட கடந்த கால சந்தர்ப்பங்கள் பற்றிய மீளாய்வுகள் தவிர்க்க முடியாதவாறு ஏக்கங்களைத் தருபவையாக உள்ளன.

□ இலங்கையில் இனங்கள் வாழும் பிரதேச நிலைமைகள்,

□ ஒன்றையொன்று புரிந்து கொள்ளாவகையில் மொழி வேறுபாடுகள், ஒன்றையொன்று பிணைக்கா வகையில் மத வேறுபாடுகள்,

□ இவற்றுக்கெல்லாம் மேலாக சிறுபான்மை தேசிய இன மக்களின் வாக்குகளைப் பற்றிக் கவலைப்படாமல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற வகையில் இலங்கை கொண்டிருக்கும் தேர்தல் ஜனநாயக பாராளுமன்ற அமைப்பு முறை.

இவையெல்லாம் படிப்படியாக ஒருமுகமாகத் தீவிரப்பட்டு இலங்கை மக்களிடையே ஒற்றுமை, ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கு மாறாக நம்பிக்கையீனம், பிளவு, மோதல் என்பவற்றையே வளர்த்துவிட்டன.

பாராளுமன்றத்துக்கு மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்த தலைவர்களாகத் தம்மை நிலை நிறுத்திக் கொள்வதில் அக்கறைக் காட்டினார்களே தவிர இலங்கை மக்கள் அனைவரையும் பாகுபாடின்றி நடாத்த வேண்டும். இலங்கை மக்கள் அனைவர் மத்தியிலும் இலங்கையர் என்ற உணர்வு ஏற்படத் தேவையான ஏற்பாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை காட்டவில்லை.

இலங்கையை சிங்கள பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டும், இலங்கையின் அரசியல் அதிகாரத்தையும் அமைப்பையும் சிங்கள பௌத்த இனத்தவர்கள் மட்டுமே நிர்ணயிக்க வேண்டும் என்ற அடிப்படைகளிலேயே ஆட்சியாளர்கள் கடந்த காலம் பூராவும் செயற்பட்டு வந்தார்கள். தமிழர்களின் அடிப்படையான கோரிக்கைகளைக் கூட ஏறெடுத்தும் பார்க்காமல் விட்டார்கள்.

இதனால் தமிழர்கள் மத்தியில் சிங்களவர்களுக்கு எதிரான இன உணர்வு அரசியல் வளர்வதும் அவ்வாறானதை வளர்ப்பதுவும் மிகச் சுலபமான விடயமாகியது. பாராளுமன்றத்திலிருந்த தமிழ் பிரதிநிதிகள் மற்றும் தமிழின அடிப்படையில் செல்வாக்கு வகித்து வந்த மிதவாத அரசியற் கட்சிகள் எழுப்பிய கோரிக்கைகள் எதனையும் அரசியல் அதிகாரத்தில் இருந்தவர்கள் எவரும் தாங்கள் அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் இல்லையென்று இருந்தனர்.

சுதந்திரத்துக்கு முந்திய இலங்கையின் அரசியலில் ஆங்கில ஏகாதிபத்தியம் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்பதில் தமிழ்ப்பிரமுகர்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. ஆங்கிலேயர்கள் இலங்கையிலிருந்து வெளியேறுவதால் தமது அரசியல் சமூக பொருளாதார இருப்புக்கு ஆபத்து எனக்கருதியிருந்தனர் எனலாம்.

ஆயினும் ஆங்கிலேயர்கள் வெளியேறப்போகின்றார்கள் என்பதை சோல்பரி அரசியல்யாப்பு சீர்திருத்த ஆணைக்குழு காலத்திலேயே தமிழ் அரசியற் பிரதிநிதிகள் உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் அப்போது பிரித்தானியர்கள் தமது காலனிமுறை ஆட்சி அதிகாரத்தை இந்தியாவிலிருந்து விலக்கிக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலகட்டத்தில் தமிழர்கள் மத்தியிலிருந்து தமிழர்களுக்கு என ஒரு மாநில சுயாட்சி அமைப்பு முறைக்கான கோரிக்கை எதுவும் இருக்கவில்லை.

1919ம் ஆண்டு இலங்கையர்களுக்கு கூடுதலான அரசியல் அதிகாரத்தைப் பெறுதல் என்னும் நோக்குடன் கொழும்பு மைய இலங்கைப் பிரமுகர்கள் சேர் பொன் அருணாசலம் அவர்களின் தலைமையில் இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கினர்.

ஆனால் இரண்டே ஆண்டுகளுக்குள் அதாவது 1921ல் மெக்கலம் என்பவரின் சீர்திருத்தத்தின்படியான புதிய அரசியல்யாப்பைத் தொடர்ந்து, சேர். பொன் அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரசை விட்டுப் பிரியவும், அதற்கு எதிராக அவர் சிங்களவர்களை நம்பக் கூடாது என்று சொல்லிக்கொண்டு தமிழர் மகாசபை என ஒரு அமைப்பை உருவாக்கவும் நேரிட்டது. அப்போது அவர் முன்வைத்த அரசியற் கோரிக்கையானது இலங்கையின் சட்டங்கள் நிறைவேற்றும் சபையிலும், நிறைவேற்று அதிகார சபையிலும் சிங்களவர்களுடன் ஒப்பீட்டுரீதியில் தமிழர்களுக்கு எவ்வளவு பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதாகவே இருந்தது.

அவர் தமிழர்களின் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட மாநில சுயாட்சியைக் கோரவில்லை. அதே சமகாலகட்டத்தில் சிங்களவர்கள் மத்தியில் கண்டிச் சிங்களவர்கள், கரையோரச் சிங்களவர்கள் என நிலவிய வேறுபாட்டின் காரணமாக, கண்டிச் சிங்களவர்கள் இலங்கையில் பிரதேசவாரியான மாநில சுயாட்சி அமைப்பு முறையைக் கோரிய போது அதனை சேர் பொன் அருணாசலம் போன்றவர்கள் நிராகரித்தார்கள்.

திரு. அருணாசலத்தின் காலகட்டத்தில் அமெரிக்காவில் மாநில அமைப்பு வெற்றிகரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. சோவியத் புரட்சி ஏற்பட்டு பிரிந்துவாழ்வதை நிர்ணயிக்கும் அளவுக்கு சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி அமைப்புமுறை சிறப்பாக நிறுவப்பட்டது. இந்தியாவிலும் அப்போது சமஷ்டி முறையை அறிமுகப் படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் பிரித்தானிய அரசாங்கம் ஈடுபட்டிருந்தது. எனவே அந்த நேரத்தில் இந்த சமஷ்டி அமைப்பு என்னும் விடயம் புதிதான ஒன்றாக இருக்கவில்லை.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தேசியத் தலைவர்கள் மத்தியில் அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்றவை இலட்சிய நாடுகளாக இருந்தன. ஆனால் இலங்கைத் தமிழ்த்தலைவர்கள் மத்தியில் மாறாக அவர்களின் விசுவாசமும் அனுபவமும் பிரிட்டிஷைச் சுற்றியதாகவே இருந்திருக்கின்றது. சோவியத் யூனியன் அன்றைய கொழும்புத் தமிழ்ப் பிரமுகர்களை ஈர்க்காமற் போனதில் ஆச்சரியமில்லை ஆனால் அமெரிக்காவை அவர்கள் அவதானிக்கத் தவறியது துரதிருஷ்டவசமான ஒன்றாகும்.

ஆயினும், யாழ்ப்பாணத்து இளைஞர்கள் மத்தியில் சோவியத் சோசலிசப் புரட்சியின் அலைகள் ஊடுருவியிருந்ததை நாம் காணமுடியும். அவர்கள் தென்னிலங்கை இடதுசாரி அரசியலுடன் தம்மை நெருக்கமாக வைத்திருந்தனர்.



திரு ஹண்டி பேரின்பநாயகம்

இந்த இளைஞர்கள் 1931ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை சட்டசபைக்கான பொதுத் தேர்தலை யாழ்ப்பாண மக்கள் பூரணமாக நிராகரிக்கும் அளவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை வைத்திருந்தனர்.

இலங்கையின் அரசியலில் யாழ்ப்பாணத்துப் பொதுமக்கள் தமது அரசியல் ஆளுமையை வெளிப்படுத்திய முதலாவது சம்பவம் இதுவெனலாம்.

யாழ்ப்பாணத் தேர்தலை ஆங்கில ஆட்சியாளர்கள் ஒத்திவைக்கும் அளவுக்கு யாழ்ப்பாணப் பொதுமக்கள் தமது எதிர்ப்புணர்வை அமைதியான முறையில் வெளிப்படுத்தியிருந்தனர். அந்த அளவுக்கு யாழ்ப்பாணப் பொதுமக்களை வழிப்படுத்திய யாழ்ப்பாண 'இளைஞர் காங்கிரஸின்' இளம் தலைவர்கள் இலங்கையின் சுதந்திரம் என்ற கோரிக்கையோடு தம்மை மட்டுப்படுத்திக் கொண்டனர். அவர்கள் காந்திய நோக்கில் தமிழ் சமூகத்தில் நிலவிய சாதி ஒடுக்குமுறைகள், பரவலாக நிலவிய படுமுட்டாள் தனமான நம்பிக்கைகள் தொடர்பாக ஈடுபாடு காட்டினார்கள். ஆனால் இலங்கையில் இனமுரண்பாடு ஆழமடையக்கூடிய வாய்ப்புக்களை அவர்கள் அன்று அடையாளம் கண்டிருக்கவில்லை.

இனங்களின் அடிப்படையிலான அரசியற் கோரிக்கைகள் என்பது 'ஏகாதிபத்திய அடிவருடிகளின் வகுப்புவாத அரசியல்' என்று அன்று தொடக்கம் 1970களின் நடுப்பகுதி வரை தென்னிலங்கை இடதுசாரிகள் கொண்டிருந்த அதே புரிந்துணர்வை 1920கள் 30களைச் சேர்ந்த யாழ்ப்பாண 'இளைஞர் காங்கிரஸ்' தலைவர்களும் கொண்டிருந்தமை ஆச்சரியப்படுவதற்கில்லை.

இங்குள்ள ஆதங்கம் என்னவென்றால், யாழ்ப்பாண மண்ணிலேயே தோன்றி எழுச்சி பெற்ற அந்த இளைஞர் காங்கிரஸ் டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கு எதிராக தாம்

பண்டிதர்

நடாத்திய மக்கள் போராட்டத்தின் போது இலங்கையில் சமஷ்டி அமைப்பு என்ற கோரிக்கையையும் முன் வைத்திருந்தால், தமிழ் பிரமுகத் தலைவர்கள் தவிர்க்க முடியாமல் அதைத் தூக்கியெடுத்திருக்கவேண்டியிருக்கும்.

அது சோல்பரி ஆணைக்குழு 1947ம் ஆண்டு அரசியல்யாப்பு திருத்தத்தின் போதாவது நிச்சயமாக அது பலாபலனை விளைவித்திருக்கும். 1930களின் நடுப்பகுதியோடு மெதுமெதுவாக ஓயத் தொடங்கிய "இளைஞர் காங்கிரஸ்" அப்படியே செயலிழந்து போனது. அதில் சிலர் தென்னிலங்கையின் சமசமாஜக் கட்சியுடன் இணைந்து கொண்டனர். ஏனையோர் தமது தனிப்பட்ட வாழ்க்கையில் ஒதுங்கிக் கொண்டனர்.

1930களில் யாழ்ப்பாணத்தில் இடதுசாரிகளின் அரசியல் பரந்துபட்டரீதியில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவில்லை. அதுவும் ஒரு சில படித்தவர்களின் ரகசிய அரசியலாகவே இருந்தது. இதனால் அக்கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பிரமுகர் அரசியல் மட்டுமே பரந்துபட்ட மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தும் நிலை மீண்டும் ஏற்பட்டது.

1934ம் ஆண்டு நடைபெற்ற மன்னார் இடைத்தேர்தலினூடாக ஜி.ஜி. பொன்னம்பலம் டொனமூர் உருவாக்கிய சட்டசபைக்குள் தன்னை நுழைத்துக் கொண்டார்.

அடுத்த இதழில் தொடரும்

# கவலைக்கிடமான கபரகலை தமிழ் வித்தியாலயம்

அம்பலத்துக்கு வரவேண்டிய ஆயிரமாயிரம் சங்கதிகள் ஆங்காங்கே குழித் தோண்டிப் புதைக்கப்படுகின்றன. வயோதிபம் கண்ட வரலாறுகள் கூட வரவேற்கப்பட்டும், வாழ்த்தப்பட்டுக்கொண்டும் இருக்கின்றன. மாற்றம் பெற வேண்டிய பல்வேறு அம்சங்கள் மண்ணோடு மண்ணாகட்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் கபரகலை தமிழ் வித்தியாலயத்தின் நிலையை பற்றியதொரு கண்ணோட்டம்.

இற்றைக்கு ஏறத்தாழ 71 வருட சரித்திர வரலாறு படைத்து விட்டாலும் தரித்திர நிலையோடு தடுமாறிக் கொண்டிருக்கிற இவ் வித்தியாலயம்

மிக மிகப் பழைமைவாய்ந்த கட்டிடத் தொகுதியோடு ஏதோ பெயருக்கு தன்னை பாடசாலையாக அடையாளப்படுத்தி இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஏறத்தாழ 750 குடும்பங்கள் வாழும் தோட்டத்தில் அமையப் பெற்றுள்ள இக்கட்டிடத் தொகுதி பாடசாலையென்ற பெயரை தவறுதலாகப் பெற்றுக் கொண்ட கொடுமைக்காக அந்தப் பெயரோடு காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற இது பாடசாலைக்குரிய இலட்சணங்கள் எதுவுமற்ற நிலையில் ஒரு மாட்டுப் பட்டியாகவே நிலை கொண்டிருக்கிறது. அன்றைய காலக்கட்ட கல்வி முறைக்கு ஏது பொருத்தமா



மிக மிகப் பழைமையான தோற்றத்துடன் காட்சியளிக்கும் கபரகல பள்ளிக்கூடத்தின் (மாட்டுப்பட்டியை ஒத்த) முகப்புத் தோற்றம்

னதாக இருந்திருக்கலாம்.

ஆனால் இன்றைக்கு எவ்விதத்திலும் பொருந்தாத போதும் இங்கு வாழும் தொழிலாளர்களும், அவர்களின் பிள்ளைகளும், ஆசிரியர்களும் பாடசாலை என்ற பெயருக்கு அங்கீகாரம் கொடுத்து மதிப்பளித்து வருகிறார்கள்.

சல்லடைக் கம்பிகளால் வேயப்பட்டும், தகரங்களினால் தடுக்கப்பட்டும் இயங்கும் இப் பாடசாலையில் 200 மாணவர்கள் தம் ஆரம்பக் கல்வியை தொடர இரண்டு ஆசிரியர்கள் (அதிபர் உட்பட) மட்டுமே அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில் ஹங்குரன் கெட்ட கல்வி வலயத்திற்குள் இயங்கும் இப்பாடசாலையின் கூரை மிகவும் பழமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

எந்த நேரத்திலும் வீசம் பேய்க்காற்றினால் பிய்த்தெறியப்படலாம் கூரை மீது குவிக்கப்பட்டுள்ள கற்கள் கடமையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர், மாணவர்களைத் எப்போது தாக்கி பதம் பார்க்கும் என்பது தெரியவில்லை. எனவே இக் கல்வி வலயத்துக்குப் பொறுப்பானவர்கள் தாமதிக்காது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற மக்களின் ஏக்கம் நிறைவேறுமா?

தகவல்

www.padippakam.com



# தடைகளுக்கு அப்பால் மனங்கொள்ள வேண்டிய விடயங்கள்

நோர்வேயின் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் பிரசன்னத்தின் பின்னர் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுக்கான வாய்ப்பு உருவாகலாம் என்ற ஒரு எதிர்பார்ப்பு எமது மக்களிடம் பரவலாக காணப்பட்டது.

புலிகளினால் மாதத்திற்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட்டு நாலு மாதங்கள் வரை தொடர்ந்த யுத்த நிறுத்தமும் அந்த நம்பிக்கையை உருவாக்கியிருந்தது.

ஆனால் புதிது புதிதாக நிபந்தனைகள் புலிகள் தரப்பால் விதிக்கப்பட்டபோது சந்தேகத்துக்குரிய நிலைமைகள் தோன்றின. யுத்த நிறுத்தம், வன்னிக்கான பொருளாதாரத் தடையை நீக்குவது தவிர தம்மீதான தடையை நீக்குமாறு புலிகள் ஆரம்பத்திலிருந்து கோரவில்லை.

அந்தக்கோரிக்கை இடையிட்டு வந்ததே. புலிகள் ஒருதலைபட்ச யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டபோது பிரிட்டனில் தடை வரும் என்று பரவலாக பேசப்பட்டதே தவிர தடை வரவில்லை.

ஆனால் தடை விதிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை அரசிடம் கோரிக்



கை வைக்கும் அவசியம் அவர்களுக்கு எழுந்தது எனலாம். ஏனெனில் உலகில் பல நாடுகளில் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு தடை என்பது அவர்களுக்கு அது ஒரு புதிய தலைவலி மாத்திரமல்ல ஏற்கனவே அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து என விதிக்கப்பட்டுள்ள தடைகள் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

எனவே சர்வதேச அளவில் வேகமாக உருவாகிவரும் இத்தகைய நிலையை கட்டுப்படுத்தவே புலிகள் இந்தத் தடை நீக்கக் கோரிக்கையை முன்வைக்கினறனர் என்றே பரவலாகக் கருதப்படுகின்றது.

புலிகள் ஒரு சமாதானத் தீர்வுக்கு முன்வரும்வரை அரசிடமிருந்து தடை நீக்கத்தை அவர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உலகின் எந்தவொரு இயக்குமும் தான் ஒடுக்குமுறை அரசு என்று கருதும் அரசிடம் தன்னை சட்ட பூர்வமாக அங்கீகரிக்குமாறு கோரிக்கை விடுவதில்லை.

புலிகள் தமது நிலைப்பாட்டிலிருந்து தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதாக திருப்தியடையும் வேளையில் அத்தகைய கோரிக்கையை விடுவதே அர்த்தமுள்ளதாக இருக்கும்

அப்படியானால் ஒருவரையொருவர் அங்கீகரிக்காத நிலையில் எவ்வாறு பேசுவது? அங்கு ஒரு நல்லெண்ண சூழல் நிலவுமா என்று கேட்கப்படுகிறது.

இப்போது ஒருவருக்கொருவர் அங்கீகரிக்காத நிலையிற்தான் இரு தரப்பினரும் மூன்றாம் தரப்பின் அனுசரணையுடன் தத்தமது தரப்பை எடுத்துக் கூற இருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் அங்கீகரிப்பதும் அங்கீகரிக்காததும் அந்தப் பேச்சுவார்த்தையின் போக்கிலேயே தீர்மானிக்கப்பட முடியும்

சரி இந்தப் இரண்டாந் தரப் பிரச்சினைகள் தீர்ந்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் போகிறதென்றால் எதைப்பற்றிப் பேசப் போகிறார்கள். திம்புக் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் என்று கேட்கப்போகிறார்களா?

திம்பு கோரிக்கைகள் எனும் போது

- தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரி.
- பாரம்பரிய பிரதேச உரிமையை அங்கீகரி.
- சுயநிர்ணய உரிமையை அங்கீகரி

இவை இங்கு அடிப்படைக் கோட்பாட்டு வடிவத்திலேயே காணப்படுகின்றன. பேச்சுவார்த்தை என்று வரும் போது யதார்த்தங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் இடையேயுள்ள உண்மை நிலவரங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களின் அபிலாஷைகள் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும். எத்தகைய அதிகாரங்கள் மததிய அரசிடம் இருக்க வேண்டும்? தேசிய ரீதியலான விடயங்கள் எவை? எனபனவெல்லாம் முக்கியமானவை.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களின் அபிலாஷைகளை எவ்வாறு கருத்திற்கெடுப்பது.

மலையக மக்களின் எதிர்காலம் என்ன?

வடக்கு கிழக்கில் இருந்து துரத்தப்பட்ட முஸ்லீம் மக்களின் எதிர்காலம் என்ன?

யுத்தந்துக்கு அஞ்சி நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்து இன்று பல ஆயிரம் மைல்களுக்கப்பால் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களின் எதிர்காலம் என்ன?

பேரினவாத அரசுகளினால் இனரீதியாக நடத்தப்பட்ட வன்முறைகள் தொடர்பாகவும் அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய தீர்வுகள் தொடர்பாகவும்,

தமிழ் மக்களுக்குள் நடந்த பாசிச ஜனநாயக விரோத படுகொலைகள் பற்றியும்,

இரண்டு தரப்பு சிறைகளிலும் வைக்கப்பட்டிருப்பவர்கள் பற்றியும்,

எல்லைப் பிரதேசங்களில் வாழும் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களின் பாதுகாப்பு பற்றியும்,

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக



தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்கள் பற்றியும்,

பயங்கரவாத தடைச்சட்டம்

ஒரு மனிதரை சித்திரவதை செய்வதற்கு அல்லது கொல்வதற்கு ஆயுதம் வைத்திருப்பவரின் தனி உரிமையாக நிலவும் ஆபத்தான நிலைமைகள் பற்றியும்,

வடக்கு கிழக்கில் பல கட்சிகள், பல்வேறு சமூக நிறுவனங்களின் செயற்பாடு கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றியும் பேசப்படல் வேண்டும்.

"மாமியார் உடைத்தால் மட்குடம் மருமகள் உடைத்தால் பொற் குடம்" என்ற பாரபட்சமான அணுகுமுறை புலிகளால் கடைபிடிக்கப்படுகிறது. புலிகள் ஒரு பத்திரிகையாளனை அல்லது அறிவு ஜீவியை அல்லது ஒரு அரசியல்வாதியை கொலை செய்தால் அது துரோகிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனையாகச் சித்தரிக்கப்படுகிறது. இதில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பனவும் அடங்கும்.

இந்த விடயங்கள் பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்களாலும்,



ஐ.நா பிரதிநிதிகளாலும் அறிக்கையிடப்பட்டும் அதனை புலிகள் காதிலே போட்டுக் கொள்ளாமல் மக்கள் விரோத நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இவற்றைப்பற்றி தமிழ் பத்திரிகை உலகமும், உள்ளூர் இலத்திரனியல் ஊடகங்களும் எந்த அபிப்பிராயத்தையும் தெரிவிப்பதில்லை என்பது துரதிஷ்டவசமான உண்மையாகும்.

எது மிகப் பெரிய உயிராபத்தை விளைவிக்கும் ஆபத்தையுடையதோ அதனைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிப்பது தமக்கு ஆபத்து என்று கருதுவது ஒருபுறமிருக்க, ஆனால் அந்த ஆபத்துக்களைப் பாராட்டுவதே இங்கு பலருக்கு பிழைப்பாகவும் இருக்கிறது.

அரச தரப்பில் மக்களின் நடமாடும் சுதந்திரம் எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதோ அதே போல் புலிகளும் நடமாடும் சுதந்திரத்தை கட்டுப்படுத்து வதற்கு பாஸ் நடைமுறைகளைவைத்திருக்கிறார்கள். ஒரு விதத்தில் அரசுக்கு இத்தகைய நடைமுறைகளைக் கற்றுக் கொடுத்தவர்களே அவர்கள்தான் இன்னும் சொல்லப் போனால் புலிகள் மக்களின் நடமாடும் சுதந்திரத்தை வெறும் பாஸ் முறையால் மட்டுமல்ல, ஆட்பிணை, சொத்துப்பிணை என் பவற்றால் எல்லாம் அடக்கி வைத்திருக்கிறார்கள்.

50,000 மக்கள் இந்த 20 வருட யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏழு லட்சம் பேர் அகதிகளாக ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் வாழ்ந்து வருகிறார்கள். உள்நாட்டிலும் லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள். மதிப்பிட முடியாத அளவுக்கு பொருளாதாரச் சேதம் ஏற்பட்டுள்ளது. கலாச்சார, மனித விழுமிய, தார்மீக வலுக்கள் அழிக்கப்பட்டுள்ளன. சமுதாயம் முழுவதுமே விகாரமாக்கப்பட்டு திக்பிரமை பிடித்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமைகளில் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் பிரச்சினைகளின் முழுப்பரிமாணத்தையும் பற்றிய ஒரு சரியான மதிப்பீடு தேவை. அதன் நீள அகலங்கள் முழுவதும் புரிந்து கொள்ளப்பட்டு முற்றுமுழுதாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பல இருக்கின்றன.

மனிதர்களாக வாழ்வதற்கான அடிப்படை நிபந்தனைகள் உணவு, உடை, உறையுள், நீர், காற்று மாத்திரமல்ல மனிதனுக்கு சுதந்திரம் வேண்டும். தனது கருத்தை வெளியிடும் சுதந்திரம் வேண்டும். மற்றவர்களுடன் மாறுபடும் தனது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் வேண்டும். தான் கொண்ட கொள்கையை நம்பிக்கையை முன் கொண்டு செல்வதற்கு அதனடிப்படையில் இயங்குவதற்கு சுதந்திரம் வேண்டும்.

**திருநாவுக்கரசு - எஸ்**

மனிதர்கள் மந்தையிலிருந்து வேறுபட்டவர்களாக இருக்கச் சுதந்திரம் வேண்டும். தமது சமூக பொருளாதார அரசியல் வாழ்வின் மீது ஏகபோகம் செலுத்த முனையும்-ஆக்கிரமிப்பு செய்ய முனையும் சக்திகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க உரிமை வேண்டும். தமது பிரதிநிதிகளைத் தாங்களே அச்சமின்றித் தெரிவு செய்யச் சுதந்திரம் வேண்டும்.

அதேபோல் இந்த நாட்டில் எந்தப் பிரஜைக்கும் இரண்டாம் தரப் பிரஜை என்று மதத்தின் பேரிலோ இனத்தின் பேரிலோ மொழியின் பேரிலோ கலாச்சாரத்தின் பேரிலோ பொருளாதார நடவடிக்கைகளின் பேரிலோ வேறு எந்த வன்முறை வடிவிலோ மேற்கொள்ளப்படும் அடாவடித்தனங்களை-அடக்கு முறைகளை பணியாது எதிர்க்கும் உரிமையும் வேண்டும்.

2001ம் ஆண்டில் தலைசிறந்த மனிதர்கள் செய்யக்கூடியது, தலைசிறந்த சமுதாயம் ஒன்றை உருவாக்க முயற்சிப்பதே. மனிதர்க



ளை மனிதர்கள் நேசிக்கும், பரஸ்பர மனிதர்களின் உரிமைகளை மதிக்கும் ஜனநாயகம், மனித உரிமை, பொருளாதார சமத்துவம் என்பனவற்றை நிலைநாட்டுவதே. நாகரீகமான சமூக அம்சங்களே சுபீட்சப் பாதையின் அடிநாதமாக இருக்க முடியும்.

சுடுகாட்டை உருவாக்கும் உணர்ச்சிகரமான வீராவேசமோ அல்லது மற்றவர்கள் கீழ்மக்கள் நாம் பிறப்பால் மேலானவர் இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு எந்த உரித்தும் கிடையாது என்று கருதும் பேரினவாதத் தலைக்கனமோ இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கையை வெகுவிரையில் உலகின் மிகப்பிரபலமான சுடுகாடாக மாற்றி விடலாம்.

அறிவும், மனிதநேயமும் உள்ள செயற்பாடுகளே தற்போது வேண்டப்படுகின்றன.

தற்போது நோர்வேயின் முன்முயற்சியில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான பலனை தரவேண்டுமானால் தனிப்பட்ட குறுகிய நலன்களுக்கு அப்பால் உண்மையான பிரச்சினைகளை திறந்த மனத்துடன் அணுக வேண்டும். தன்னை அங்கீகரிக்க வேண்டும், தானே ஏகப்பிரதிநிதி என்னும் போதே அங்கு ஏதேச்சாதிகாரத்துக்கு அனுமதி கேட்பது தெளிவாகத் தெரிகின்றது. அப்போதே பொது நலன்கள் சம்பந்தப்பட்ட சகல விடயங்களும் அடிபட்டுப் போகின்றன. ●

## இரங்கல்



காலஞ்சென்ற மேன் முறையீட்டு நீதிபதி பாலகிட்ணர் சமூக கலை இலக்கிய ஈடுபாடுள்ள மனிதராவார்.

இலங்கையின் பல பகுதிகளில் குறிப்பாக வடக்கு கிழக்கின் பல்வேறிடங்களிலும் சிறந்த பணியாற்றியிருக்கிறார்.

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பாலகிட்ணர் அவர்கள் யாழ் இந்துகல்லூரிக்குப் பெருமை சேர்த்த பழைய மாணவருமாவார்.

அன்னாரின் மறைவிற்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த 10 மே 2001 இல் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட செ. சண்முகராசா அவர்கள் உரையாற்றியதாக வந்த விடயம் தொழிற் சங்கக் கூட்டுக் குழுவின் தலைவர் எஸ். தவராசா அவர்களால் ஆற்றப்பட்டது.

தவறுக்கு வருந்துகிறோம். (ஆசிரியர், கண்ணோட்டம்)

படிப்பகம்

www.padippakam.com



# தென்னிலங்கையில் உருவாகிவரும் ஒரு புதிய போக்கு

இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வு என்பதைவிட இதனை தமது அரசியலுக்கு அல்லது தமது வியாபாரத்துக்கு பயன்படுத்தலாமா என்பதே மேலோங்கிய போக்காகும்.

இனப்பிரச்சினை தொடர்பான ஒரு விடயம் ஆட்சியை கவிழ்ப்பதற்கோ அல்லது அற்பமான சில குறுகிய நலன்களுக்கோ உதவுமானால் அதனை பயன்படுத்துவது, மற்றபடி பிரச்சினையை அலட்சியப்படுத்துவது அல்லது எதிராக நிற்பது என்பதுவே இந்தப் போக்காகும்.

அதேவேளை சிறுபான்மை மக்களுடன் சம்பந்தமில்லாத வேறு கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன. அவை சில வேளைகளில் உப்புச் சப்பற்ற சில்லறை பிரச்சினைகளாகவும் இருக்கலாம்.

உதாரணமாக ரணில் அரசை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு கூறுகிறார். தடையை நீக்குவதைப் பற்றி அபிப்பிராயம் கூற மறுக்கிறார். ஆனால் அவரின் கட்சி முக்கியஸ்த்தர்கள் டிரோன் பெர்னாண்டோ, மகிந்த சமரசிங்க போன்றோர் தடை நீக்கப்படக்கூடாது என்கிறார்கள்.

பேச்சுவார்த்தை என்று வரும்போது பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் வரைதான் அரசு, நோர்வே, புலிகள் என்றிருக்க முடியும். மேசைக்கு வந்துவிட்டால் தாமும் அதில் பங்குபற்ற வேண்டும் என்கிறார்கள்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று சொல்வதில் ஒரு தட்டிக் கழிப்பு அலட்சியப் போக்கையே ஐ.தே.க தொடர்ச்சியாக கடைபிடித்துவருகிறது.

சிங்களவர்களின் ஆதிக்கமுள்ள





ஆங்கில தினசரிகள், வாரப்பத்திரிகைகள் அவ்வாறுதான் செயற்படுகின்றன.

தமிழ் காங்கிரஸ், த.வி.கூ, அரசை கவிழ்ப்பதற்கான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்கக் கூடும் என்ற ஊகங்களுக்கு தலையங்க முக்கியத்துவம் கொடுக்கும் இப்பத்திரிகைகள் அவர்கள் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்கும் காரணங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. அவை தொடர்பாக நேர் எதிரான நிலைப்பாடுகள் இப்பத்திரிகைகளிடம் உண்டு.

நாட்டில் விலைவாசி ஏற்றம், பாதாள உலகக் கோஷ்டிகளின் பெருக்கம் பற்றி கவலை கொள்ளும், அவற்றையே தேசியப் பிரச்சினையாகக் கருதும் இந்தப் பத்திரிகைகள் அன்றாட யுத்த கெடுபிடிகளுக்குள் வாழும் மக்களின் துயரங்கள் பற்றி கன கச்சிதமாக இருட்டடிப்பு செய்துவிடுகின்றன.

அதிகாரப்பகிர்விற்கு ஆதரவாக இந்த 'ஐலண்டோ', 'சன்டே லீடரோ' அல்லது 'சன்டே டைம்ஸோ' ஒரு ஆசிரியத் தலையங்கத்தைத் தானும் தீட்டியதில்லை.

இதேபோல் இன்னொரு ரகத்தினர் இருக்கிறார்கள். இவர்களுக்கு மாமூலான தேர்தல் வன்முறைகளும், பிரதம நீதியரசரின் தனிப்பட்ட ஒழுக்கமுமே பாரிய பிரச்சினையாகத் தெரியும்.

இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்பதுபோல் இவர்கள் எழுதுகிறார்கள்.

ஐ.தே.கவினர் தாம் பதவிக்கு வருவதற்கு தமிழர்களினதோ, முஸ்லீம்களினதோ ஆதரவை திரட்டுவதற்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைவார்கள். ஆனால் தாம் எந்தவிதமான அதிகாரப்பகிர்வு பற்றியும் மூச்சு விடமாட்டார்கள்.

மாவனெல்லை சம்பவங்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைக்கு சகல ஆங்கிலச் சிங்களவர்களின் பத்திரிகைகளும் ஆரவாரமான ஆதரவு. ஆனால் அதில் பாதிக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு எதிராக துவேஷமாகவே இவை எழுதுகின்றன.

ஹக்கீமின் ஆதரவு ஐ.தே.க வுக்கு முக்கியம் கிடைக்க வேண்டும் என்பதே தவிர முஸ்லீம்கள் எக்கேடு கெட்டால் என்ன என்பதே இவர்களின் நிலைப்பாடு.

மாவனெல்லை சம்பவங்களுக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் ஐ.தே.க வின் கபடத்தனமும் யோக்கியதையற்ற தன்மையும் என்வென்றால் தாம் பதவி வகித்த 17 வருடத்தில் மூன்று தடவைகள் குறுகிய கால இரண்டு மூன்று வருட இடைவெளியில் அடுத்தடுத்து மூன்று முறை இன வன்முறைகளை தூண்டிவிட்டதாகும்.

ஆனால் ஐ.தே.க வும் அதன் ஆதரவு பத்திரிகைகளும் எதுவுமே தெரியாத பாப்பாக்கள் போல் பாசாங்கு பண்ண முனைகின்றன.

இங்கு மனிதாபிமானம் என்பதும், ஜனநாயகம் என்பதும் சந்தர்ப்பவாதம் சார்ந்ததாகவே இருக்கின்றது.

மக்களின் மனநிலையை சாட்டாக வைத்து ஐ.தே.கட்சியை மிதவாத தாராளவாத கட்சியாக காட்டும் முயற்சியில் முற்போக்கு என்று சொல்பவர்களும் இறங்கியுள்ளார்கள். இவர்கள் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வெவ்வேறு காலகட்டங்களில் தமது சந்தர்ப்பவாத போக்கிற்கு ஏற்ப வெவ்வேறு அளவு கோல்களை இவர்கள் பாவிக்கிறார்கள்.

இந்தப் பத்திரிகைகளும் இந்த அரசியல் வாதிகளும் ஜனாதிபதி தேர்தல், உள்ளூராட்சி தேர்தல்களில் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தேசிய அரசியலில் செல்வாக்குச் செலுத்தகூடியதாய் இருப்பதையிட்டு பெரும் ஆதங்கம் கொண்டுள்ளன. அதைப்பற்றி அடிக்கடி விசனத்துடன் எழுதுவார்கள்.

இந்த ஆதங்கத்துக்கு உடந்தையாக இருக்கும் பேரினவாத விஷஜந்துக்களுக்கு தமது பத்திரிகைகளில் பக்கங்களை ஒதுக்கிக் கொடுப்பார்கள். ஒப்புக்கு ஒன்றிரண்டு பந்தியும் வரும். தாம் பாரபட்சமற்றவர்கள் என்று காட்டுவதற்காக. தேசிய அரசியல் என்பது பௌத்த சிங்கள அரசியலாகவும் தேசிய பத்திரிகை என்பது பௌத்த சிங்கள பேரினவாதத்தை குறித்து நிற்கும் வரை இங்கு இடைவெளிகள் ஆழமான பிளவாகவே மாறிச் செல்லும் எல்லாவற்றுக்கும் மேலாக இனவாதத்தை பரப்பும் பத்திரிகைகள், இவற்றை எழுதும் குறிப்பிட்ட பேர்வழிகள் எல்லோரையும் பத்திரிகையாளர்கள் என்ற கணக்கில் எடுத்துக் கொள்ளும் சுதந்திர ஊடகக்காரரை என்னவென்று அழைப்பது?

**மருணிக்கியன்**

# யாழ் குடா நாட்டில் அதிகரித்துள்ள சட்ட விரோத மது உற்பத்தி



யாழ் குடா நாட்டில் அதிகரித்துள்ள சட்ட விரோத மது உற்பத்தி விற்பனை என்பவற்றால் ஏற்படும் சமுதாய சீர்கேட்டை தடுக்கும் முயற்சிக்கு யாழ் பல்கலைக்கழக சமூகத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்ற பிரேரணையை ஜனநாயக விடுதலை முன்னணியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் திரு. மு. தவநாதன் கொண்டுவந்தார்.

இப் பிரேரணையில் சட்டவிரோதமான முறையில் மதுபானம். கசிப்பு போன்றவை விற்கப்பட்டு மக்களுக்கு பெரிதும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றதெனவும் அதனை உடனடியாக தடுப்பதற்கேற்ற வழிவகைகளை கையாளுவதற்கு மாநகர சபை உதவி வழங்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சபையின் முதல்வர் த.வி.கூ.வைச் சேர்ந்த தரவிராஜ் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் மாநகர சபை பல்வேறு அபிவிருத்தி மற்றும் சமூக சீர்கல் விடயங்களில் ஈடுபட்டு வருகின்றது. கசிப்பினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது.

நகருக்குள் உள்ள முக்கியமான ஜனநாயக நிறுவனம் என்ற வகையில், மக்களின் அடிப்படை விடயங்களை கவனிக்கும் நிறுவனம் என்ற வகையில் மாநகர சபையையும் இப்படியான பொது விடயங்களில் அவர்கள் அணுக வேண்டும் என குறிப்பிட்டார்.

உறுப்பினர் த. சுபத்திரன் இப்படியான பொது விடயங்களை பல்கலைக்கழகம் எடுப்பது நல்ல விடயம். ஆனால் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஒரு சில பக்கச் சார்பான விடயங்களை பல்கலைக்கழக சமூகம் என்ற பெயரில் முன்னெடுக்கிறார்கள்.

ஆனால் சமூகத்தை பாதிக்கும் எல்லா விடயங்களிலும் குரல் எழுப்புவதில்லை. பொதுவாக படுகொலைகள், மனித உரிமை மீறல்களை கண்டிப்பதில்லை. எமது இரண்டு மேயர்கள் மற்றும் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டபோது எவ்வாறான கருத்தையும் தெரிவிக்கவில்லை.



45 அப்பாவிப் பொது மக்களை கொலை செய்த லயன் எயார் சூட்டு சம்பவத்தை பற்றி கருத்துத் தெரிவிக்கவில்லை. இயல்பு வாழ்க்கை நல்லெண்ண புறச் சூழல் என்று சொல்லிக் கொண்டு மாற்றுக் கருத்துக்

வும் சொல்வதில்லை.

ஆனாலும் இது ஒரு பொது விடயம் என்ற வகையில் எமது ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும். அதே சமயத்தில் அவர்கள் பாரபட்சமில்லாமல் விடயங்களை அணுக வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மு. தவநாதன் மீண்டும் கருத்துத் தெரிவிக்கையில் நாம் நேரடியாக ஈடுபடும் போது பல பிரச்சினைகள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதை பல்கலைக்கழக மாணவர்கள் செய்யும் போது அதற்கு எதிர்ப்புக்கள் வருவதில்லை.

அவர்கள் மினி சினிமாக் கொட்டகையை எரித்திருக்கிறார்கள், சஞ்சிகைகளை கொளுத்தியுள்ளார்கள். அதற்கு எதிர்ப்பு எதுவும் ஏற்படவில்லை. சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களின் ஆதரவு கூட அதற்கு இருக்கிறது என்றார்.

அதற்கு த. சுபத்திரன் பதிலளித்து பேசும் போது வன்முறைகள் பயமுறுத்தல்கள் உடனடியாக வெற்றியளிப்பதுபோல் தோன்றினாலும் நீண்ட காலத்தில் அப்படியிருப்பதில்லை. பல்கலைக்கழக மாணவர்களின் நடவடிக்கைகளுக்கு ஒரு பின்னணி இருப்பதாக சிலர் கருதுகிறார்கள்.

புலிகள் செயற்பட்ட போது இங்கு இரவிலும் பெண்கள் நடந்து போகக் கூடியதாக இருந்தது. திருட்டுக்கள் இல்லை அது ஒரு பொற்காலம் என்று சொன்னார்கள்.

ஆனால் 1996 இடப்பெயர்வின் பின் திரும்பி வந்தவர்கள் சிலர் பக்கத்து வீட்டுக்காரரின் பொருட்களை எடுப்பதிலேயே அக்கறையாக இருந்தார்கள். தென்மராட்சியை கைப்பற்றிய வேளையில் எல்லைப்படைகளே பொருட்களை கொள்ளையிட்டார்கள். சினிமாக் கொட்டகைகளை எரிப்பதாலோ, மாற்றுக் கருத்து சஞ்சிகையை கொழுத்துவதாலோ அவற்றை முறியடிக்க முடியாது.

நாம் ஜனநாயக நிறுவனம். அவற்றிற்கு நாம் ஆதரவு தெரிவிக்க முடியாது. ஜனநாயக வழியில் மக்களை பாதிக்கும் விடயங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பொறுப்பும் கடமையும் இந்த சபைக்கு இருக்கிறது என சுபத்திரன் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி உறுப்பினர் திரு. கனகரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில் இப்படியான சமூக சீர்கேட்டிற்கு கருத்துத் தெரிவிக்க முன்னர் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்கள் இணையும் போது ராகிங் என்ற போர்வையில் செய்யப்படும் மோசமான நடத்தைகளையும், கொடுமைகளையும் முதலில் நிறுத்த வேண்டும். இதனால் புதிய மாணவர்கள் தற்கொலை செய்ய வேண்டிய நிலைக்குத் தாண்டப்படுகின்றார்கள் என்று சொன்னார்.

சகலரும் கருத்துத் தெரிவித்த பின்னர் யாழ் குடாநாட்டில் அதிகரித்துள்ள சட்ட விரோத மது உற்பத்தி விற்பனை என்பவற்றை அழித்து சமுதாயச் சீர்கேட்டை தடுக்கும் முயற்சியை யாழ் மாநகர சபை ஆதரிக்கின்றது. அதற்குரிய சகல ஒத்துழைப்பையும் வழங்கமுடியும் என்றும் இவ்வாறான பொது விடயங்களுக்கு மக்கள் நலனை முன்வைத்து செயல்படும் உள்ளூராட்சி நிறுவனமான மாநகரசபை போன்ற ஜனநாயக நிறுவனங்களுக்கு உரிய மதிப்பளித்து அவற்றின் ஆதரவை கோரி பல்கலைக்கழக சமூகம் முயற்சி எடுக்க வேண்டும் என துணை வேந்தருக்கும் பல்கலைக்கழக மாணவர் அமைப்பிற்கும் கடிதம் எழுதுவதெனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

**யாழ், நிருபர்**

www.padippakam.com



# தோழர் பத்மநாபா ஒரு சொற் சித்திரம்



தோழர் பத்மநாபா அவர்கள் மறைந்து 11 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. தனது 39வது வயதில் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட அவர் ஒரு சரித்திரமாகவே வாழ்ந்தார். அவரது மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவு என்றால் அது மிகையல்ல.

ஈழ மாதா 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பெற்றெடுத்த மாபெரும் தலைவர் அவர்.

மனிதாபிமானம், ஜனநாயக உணர்வு, எளிமை என்பன அவரின் அருங் குணாங்கள். இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் சுமித் சக்கரவாத்தி அவர்கள் "அதிர்ந்து பேசாத செயலாளர் நாயகம்" என அவரது படுகொலையின் போது "மெயின் ஸ்ரீம்" **(Main Stream)** சஞ்சிகையில் எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் விபரித்திருந்தார். வசீகரமான தோற்றமும், ஊடுருவிப் பாயும் ஒளிரும் கண்களும், தழம்பா நிறைகுடமான துல்லியமான அறிவும், அவரை நோக்கி பல்லாயிரம் தோழர்களை காந்தம் போல் ஈர்த்தன.

அவரிடமிருந்து கற்க வேண் டிய பல விடயங்கள் இன்றைய தலைமுறையினருக்கு உண்டு.



மக்களையே நேசித்த அந்த மானுடன் கிராமங்கள் தோறும் மக்கள் சந்திப்பில்



(இ.வ) மைத்துனர், மனைவி, தாய், அக்கா, தங்கையுடன்



மக்களையே நேசித்த அந்த மானுடன் பன்னிரு தோழர்களுடன் மனித மிருகங்களான புலிகளால் குதறப்பட்ட நிலையில்

ஈழத்து தலைவர் ஒருவரது மரணத்தில் தமிழகம் முழுவதும் சோகக்கடலில் மூழ்கியது, தோழர் பத்மநாபா அவர்களின் மறைவின் போதுதான். அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஆயிரமாயிரம் மக்கள் கூட்டம் அவர் எவ்வளவு தூரம் சர்வதேசியவாதியாக இருந்தார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

இலங்கையில் அவர் வேலை செய்யும் போது மலையக பாட்டாளி வர்க்கம், வடக்கு கிழக்கின் தொழிலாளர் விவசாயிகள், சிங்கள முற்போக்கு புத்தி ஜீவிகள், சகலரிடமும் அளவு கடந்த பேரபிமானம் கொண்டிருந்தார். தோழர் பத்மநாபாவுடன் ஒரு நாள் பழகிய மனிதர் கூட தனது வாழ்க்கை முழுவதும் மறக்கமாட்டார்.

கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்றல், ஓய்வொழிச்சல் இல்லாத உழைப்பு என்பனவே அவரின் தாரக மந்திரங்களாக இருந்தன.

சிதறுண்டு கிடந்த தமிழ் இயக்கங்களை ஒற்றுமைப் படுத்துவதிலும், இன்று எல்லோரும் வாய் கிழியப் பேசும் திம்பு கோரிக்கைகளை பூட்டானில் முன்வைப்பதற்கு அடித்தளம் இட்டவரும் அவரே.

ஆனால் இன்று வரலாறு திரிக்கப்பட்டு பொய்களே ஆட்சி செய்கின்றன.

1970களின் முற்பகுதியில் தமிழ் மாணவர் பேரவையினூடாகவே அவரது அரசியல் பிரவேசம் நடைபெற்றது. 1979 இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் இளைஞர்களின் உயிர்களைக் காவு கேட்ட போது மயிரிழையில் உயிர் தப்பியவர் அவர்.

பாலஸ்தீனத்தின் இடதுசாரி முற்போக்கு அணியான பாலஸ் தீன விடுதலைக்கான பிரபல்ய முன்னணியின் பாசறையில் பயிற்சி பெற்றவர்.

இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் காலஞ்சென்ற தலைவர்களில் ஒருவரான தோழர் பி. ராமமூர்த்தியுடன் சென்று அன்னை இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து எம் பிரச்சினைகளை எடுத்துரைத்த முதல் இளந்தலைமுறைத் தலைவர் அவர்.

தமிழக, இந்திய, இலங்கை யின் முற்போக்கு இடதுசாரி அரசியல் தலைவர்கள் இளந்தலை முறையினர் மத்தியில் மரியாதைக்குரிய ஒருவராக போற்றப்பட்டார்.

நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டு வெறுமை மிஞ்சி அடுத்த வேளை உணவுக்கே கஷ்டப்பட்ட நிலவரங்களிலெல்லாம் "நோ புரொப்பிளம்" என்று சொல்லிக் கொண்டு நம்பிக்கைகளை மனதில் பொங்கி பிரவாகிக்க வைத்து வேலை செய்தவர் அவர்.

இலங்கைக் கனவான்கள் பலரும் ஈழத்தமிழ் பேசும் மக்களினது போராட்டத்தை எள்ளி நகையாடியபோது தனது கையில் பசை வாளி தூக்கித் திரிந்து சென்னைச் சுவர்களில் சுவரொட் டிகள் ஒட்டியவர் அவர்.

ஈழச் செய்தி தொடர்பகம் என்ற ஒரு செய்தி நிறுவனத்தை 80களின முற்பகுதியில் சென்னையில் நிறுவி ஈழச் செய்திகள் என்ற ஒரு செய்தித் தொகுப்புச் சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். உணவுக்கு பணம் இருக்கிறதோ இல்லையே இந்த சஞ்சிகை மாத்திரம் மாதம் தவறாமல் வந்துவிடும்.

இந்தத் தாடிக்கார இளைஞனின் விடாப்பிடியான உறுதிபற்றி அப்போதைக்கு அப்போது இந்தியாவின் பிரபல தினசரிகள் தொடக்கம் முற்போக்கு சிற்றிதழ்கள் வரை எழுதி வந்தன.

ஜனநாயகம் நிலவும் சமூகத்தில் அவர் அவதரித்திருந்தால் அவர் மாபெரும் தலைவராக இன்றும் இருந்திருப்பார். ஆனால் எமது சமூகத்தில் உள்ளிருந்தே கொல்லும் பாசிசம் அதற்கு இடமளிக்கவில்லை.

இன்று சொந்த சமூகத்தையே அரித்துத் தின்னும் கறையான்கள் பெரிய மனிதர்களாக வேசம் கட்டித் திரிவதைக் காண்கிறோம். "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என்று பாரதி சொன்னதை உண்மைகளாகக் காண்கிறோம்.

ஒரு சிறிதளவும் சுயலாபமில்லாமல் அர்ப்பண உணர்வுடன் செயற்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்கள் மரணித்தவர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை சரித்திரத்தில் பதியப்பட்ட வேண்டும். பொய்கள் தற்காலிகமாகவே கோலோச்சும்.

ஆயிரம் கைகள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லையல்லவா?

www.padippakam.com



# சோக்கிரட்டீஸ் பதில்கள்

கே. சிவராமன் – வத்தளை

**நேபாள மன்னர் குடுமபத்தை இளவரசரே அழித்தது பற்றி ?**

காதல் சிக்கலால் இளவரசர்தான் தனது பெற்றோரையும் சகோதரர்களையும் கொன்று தன்னையும் சுட்டு தற்கொலை செய்துக் கொண்டார் என்று ஆரம்பச் செய்திகள் கூறின. ஆனால் இப்போது அது பற்றி பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இளவரசரால் நடத்தப்பட்ட படுகொலைகளா? அல்லது அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக உள்நாட்டிலேயே நடந்த சதியா? அல்லது நேபாளத்தின் ஸ்திரத்தன்மையைக் குலைப்பதற்காக அந்நிய சக்திகள் மேற்கொண்ட சதியா. உண்மை வெளிவருமா? புதிய மன்னரின் கீழ் எல்லாமே அடங்கிப்போகுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.



ஆர் சிறீவத்சன் – மானிப்பாய்.

**இம்முறை சொல்ஹெய்முடன் நோர்வே வெளிவிவகார அமைச்சரும் கொழும்பு வந்த சூட்சுமம் தான் என்ன ?**

உயர்மட்ட அளவில் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும் என்பதற்காகவே வந்தார் என்று நோர்வே கூறுகிறது. இல்லை இல்லை சொல்ஹெய்மை பேச்சுவார்த்தையிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று அரசாங்கம் கேட்பதாக பல பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. நோர்வேயானது கௌரவமாக இந்த முயற்சியிலிருந்து ஒதுங்கப் போகிறதா என்ற கேள்விக்கும் இடமுண்டு.

என். உதயகுமார்–பழைய கடை வீதி, நுவரெலியா.

**ஐ.தே.கவின் நம்பிக்கையில்லாப் பிரேரணை தீர்மானம் வெற்றி பெறுமா ?**

ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க வுக்குள் தன்மீது நம்பிக்கையை ஏற்படுத்த முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார். அவருக்கு எப்படி இந்த பிரேரணை மீது நம்பிக்கை ஏற்படும். ஹக்கீமை நம்பி காலை வைப்பதற்கு ரணில் தயாராக இல்லை. இந்தப் பிரேரணை முயற்சி ஐ.தே.க விற்குள் உள்ள தலைமைப் போட்டியின் வெளிப்பாடே.

ஜெயராம் சிவரஞ்சனி – பூந்தோட்டம், வவுனியா

**உயர்நீதிமன்றம் பாராளுமன்றம் இதில் எது முதன்மையானது ?**

இப்போதுள்ள அரசியல் சட்டத்தின்படி சட்டத்தை நிலைநாட்டும் உயாந்த நிறுவனம் நீதிமன்றமே. சட்டத்தை உருவாக்குவதில் மட்டுமே பாராளுமன்றம் முதன்மையானது. உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கு அர்த்தம் என்ன என்பதை நிர்ணயிக்கும் உயர் நிறுவனமும் உயர்நீதிமன்றமே.

மு. கணேசன் – மகாவித்தியாலய வீதி– கொழும்பு

**மறைந்த பிரபல ஆங்கில திரைப்பட நடிகர் அன்டனி குயினின் வாழ்வுக்கால சாதனைகளை கூறமுடியுமா ?**

சால்டன் ஹெஸ்டன், மார்லன் பிரன்டோ, ஜூல்பிரைனர் இவர்களின் வரிசையில் ஹொலிவூட்டின் வெற்றிகரமான நடிகர்களில் ஒருவரே அன்டனி குயின். உமர் முக்தார் திரைப்படம் அவரின் சாதனைகளில் உயர்ந்த முத்திரையாகும்.

வே. சோமசுந்தரம்–கோவில் வீதி, திருமலை.

**டெல்லியில் குரங்கு மனிதன், கொக்காவிலில் மர்ம மனிதன் ஒரே குழப்பமாக இருக்கிறதே ?**

இதில் குழம்புவதற்கு என்ன இருக்கிறது. டெல்லியில் என்ன கொக்காவிலில் என்ன. மனிதன் மிருகத்தின் பேரால் மக்களுக்கு தொல்லைக் கொடுக்கிறான் என்பதே தெளிவு.

ஆர். சந்திரவதனி – கொட்டாஞ்சேனை.

**வாழ்க்கை, கோகிலா எங்கே போகிறாள், தொடர்கதை பற்றி ?**

இந்தப் படங்களை எடுப்பவர்கள் ரப்பர் இனிப்பு தயாரிப்பாளர்களைவிட திறமைசாலிகள். சாதாரண மக்கள் வேலையை விட்டுட்டு திரையை நோக்கி கவரும் திறமைசாலிகள். அடுத்த தொடர் வரை காத்திருக்கும் உணர்வை ஏற்படுத்துவதில் வல்லவர்கள்.

எஸ். கிருஷ்ணராஜ் – மட்டக்களப்பு.

**நகர அபிவிருத்தி சபையின் கட்டிட இடிப்பும், கொழும்பு மாநகர சபையின் எதிர்ப்பும் எவ்வாறு விளங்கிக்கொள்வது ?**

மாநகர சபைகள் மாகாண அரசுகளுக்கு உட்பட்ட நிறுவனங்கள். அவற்றின் அதிகாரங்களின் மீது நகர அபிவிருத்தி சபை மேலாதிக்கம் செலுத்துவது அதிகார பரவலாக்கல் பற்றிய அரசியல் சிக்கல் சட்டமொன்றை உருவாக்கக் கூடும். இது அதிகார பரவலாக்கல் பற்றிய எதிர்கால முயற்சிகளுக்கும் குந்தகமானதாகும். அதேவேளை கொழும்பின் பிரதானமான வீதிகள் எல்லாம் வர்த்தகர்களினால் சட்ட விரோதமாக ஆட்கொள்ளப்பட்டிருப்பதும் அதனை மாநகரசபை அங்கீகரித்திருப்பதும் இவற்றுக்கும் இவற்றுக்குப் பின்னால் கொழும்பு மாபியா பாதாள உலகம் செயற்படுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

கொழும்பு மாநகரம் புதிய திட்டமிடலுக்கு உட்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இதில் முன் முயற்சி எடுக்காதது கொழும்பு மாநகர சபையின் தவறேயாகும். நகர அபிவிருத்தி சபையின் நோக்கங்களில் தவறில்லை. ஆனால் அவை செயற்படும் முறைகள் எதிர்காலத்தில் பிழையானவற்றுக்கு வழிகாட்டலாக அமைந்துவிடக்கூடாது என்பதில் அரசாங்கமும் அமைச்சர் மங்கள சமரவீராவும் முன்னெச்சரிக்கையாக செயற்படுதல் வேண்டும்.



எம். சத்தியநாதன் – அம்பாறை.

**அம்பாறை கரையோர மாவட்டம் உருவாகுவதை தமிழ் கட்சிகள் எதிர்க்கின்றனவே ?**

இதற்காக தமிழ் கட்சிகள் கூறும் காரணங்கள் அந்தக் கோரிக்கையை எதிர்பதற்கு போதிய காரணங்கள் இல்லை. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு தமிழர்கள் தயாராக இல்லை என்றால் தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணம் உருவாகுவதற்கு முஸ்லீம்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும். எனவே கரையோர மாவட்டம் சம்பந்தப்பட்ட விவகாரம் தமிழ் மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் இடையேயான பரஸ்பர நன்மை சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதனை தமிழ்க் கட்சிகள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

என். ஆனந்தசீலன் – வாழைச்சேனை.

**இந்தோனேசியாவின் அதிகாரம் மீண்டும் இராணுவத்திடம் செல்லுமா ?**



தன்னை அதிகாரத்தில் இருந்து நீக்கினால் இந்தோனேசியாவை பிளவுபடுத்தப் போவதாக அதன் ஜனாதிபதியே சூளுரைக்கிறார். இப்பொழுது ஒன்றுபட்ட இந்தோனேசியா இராணுவத்தின் கையில்தான் இருக்கிறது. இராணுவத் தலைமைகளில் ஒத்துழைப்பில்தான் அதிபர் வாஹித் அவ்வளவ உறுதியாக இருக்கிறார். எனவே இந்தோனேசிய பாராளுமன்றம் வாஹீத்துக்கு எதிராக ஏற்படுத்தும் குழப்பம் நேரடி இராணுவ ஆட்சிக்கு வழிவகுப்பதற்கான சாத்தியங்களே அதிகம்.

எம். மோகனராஜ் – சாவக்கச்சேரி

**கால், வாய், நோய் போன்றவை பிரிட்டனை உலுக்கியதன் பின்பும் பிளேயரின் வெற்றி எதைக் காட்டுகிறது ?**

ஒரு நாட்டில் ஜனநாயகம் வெற்றிகரமாக செயல்படுவதற்கு அந்த நாட்டு மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதுவும் மக்கள் ஒவ்வொருவரது அடிப்படைச் சுதந்திரம் பராமரிக்கப்பட வேண்டும் என்பதனையும் பிளேயரின் வெற்றி காட்டுகிறது. சில்லறை விடயங்களைக் கூறி மக்களை ஏமாற்ற முடியாத அளவுக்கு பிரிட்டனில் ஜனநாயகச் சூழல் நிலவுகிறது என்பதையே காட்டுகிறது.

செல்வி. ஏ. சிவஜோதி – ஹாலி எல.

**தமிழ் சினிமாவை சின்னத் திரை விழுங்கிவிடுமா ?**

பெரிய தமிழ் தியையில் தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும், நடிகர்களும் சின்னத்திரைகளை விழுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. பெரிய திரைகளின் நடிர்கள். நடிகைகளின் வருமானம் படத்துக்குப்படம் கோடி கோடியாக கூடிக்கொண்டிருக்கிறது. புதுபுது தமிழ் தெரியாத நடிகைகள் அறிமுகமாகிக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் சின்னத் திரை என்ன? சுவரளவுக்கு உள் வீட்டு திரை வந்தாலும் பெரிய திரைகள் பெரிது பெரிதாகத்தான் இருக்கின்றன.

வி. ஜோன்சன் – பேராதனை.

**உலக டென்னிஸ் சாம்பியன் அகாசியின் எதிர்காலம் எப்படி இருக்கும் ?**

உலக டென்னிஸ் வீரர்களிலேயே அதிகளவு நண்பர்களை கொண்டவர் அகாசியே. இவர் ஒரு சிறிது காலம் தவிர மற்றப்படி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக உலகச் சாம்பியன்கள் வரிசையில் 2ம், 3ம் இடங்களிலேயே இருந்து வருகிறார். இன்னமும் 5 ஆண்டுகளுக்காயினும் அவர் அவ்வாறு இருப்பார் என நாம் எதிர்பார்ப்போம்.

# தியாகிகளின் பெயர்கள் துஷ்பிரயோகம்

உயிர்நீத்த ஈ.பி.ஆர்.எல்.எப் தோழர்களின் பெயரைப் பயன்படுத்தி பணம் திரட்டுவதற்காக மன்னார் மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிக்கு "தியாகிகள் தின ஞாபகார்த்த விளையாட்டு நிதி" என்று பெயர் சூட்டி மன்னார் மாவட்டத்தில் அச்சிடப்பட்ட பற்றுச் சீட்டை பாவித்து ஈ.பி.ஆர்.எல்.எப் இன் பெயரைச் சொல்லி யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகர்களிடமும் பொது மக்களிடமும் பணம் வசூலிக்கப்படுகிறது.

கடந்த 1997 ஜனவரி முதல் தோழர் த. சுபத்திரன் (றொபேட்) அவர்களின்தலைமையில், வழிகாட்டலில் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் கட்சி வேலைகளில் ஈடுபட்டுவரும் யாழ் பிராந்திய கட்சி அமைப்பிற்கும் இந்த நிதி வசூலிப்பிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை முதலில் யாழ் குடாநாட்டு மக்களுக்கு குறிப்பாக வர்த்தக பெருமக்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

ஒரு அமைப்பு பொதுத் தேவைகளுக்காக பொது மக்களிடமிருந்து நிதி சேகரிப்பதில் தவறில்லை. ஆனால் அவ்வாறு நிதி சேகரிப்பில் ஈடுபடுபவர்கள் தாங்கள் யார் என்பதை தெளிவாக இனங்காட்டி நேர்மையாக அத்தகைய உதவியைக் கோரலாம். அதனைவிடுத்து தமது சுயலாபங்களுக்காக ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியை உடைத்தது மாத்திரமல்ல இன்று குடா நாட்டு மக்களின் அன்றாட அரசியல் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து முன்னின்று செயற்படாது எவ்வித அரசியல் முன்னெடுப்புகளுமின்றி, எவ்வித கட்டுக் கோப்புமின்றி இயங்கும் நான்கு பேர் அனைத்து ஈ.பி,ஆர்.எல்.எப் தோழர்களின் பேராலும் நிதி சேகரிப்பில் ஈடுபடுவது கட்சியன் அனுதாபிகளை ஆதரவாளர்களை, மக்களை ஏமாற்றுவதாகும்.

புலிகளின் ஜனநாயக மறுப்பிற்கும்,அராஜக போக்கிற்கும் எதிராகப் போராடி தமது உயிரை தியாகம் செய்த புலிகளால்படுகொலை செய்யப்பட்ட தோழர் பத்மநாபாவினதும் மற்றும் தியாகிகளதும் தியாகத்தை சொல்லி பணம் வசூலிப்பதற்கு அந்தத் தியாகிகளின் எண்ணங்களை செயலாக்கும் நோக்கமின்றி அவர்களது இலட்சியங்களை கைவிட்டு, தடம் புரண்டு புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சுயலாபத்திற்காக கூறும் எவருக்கும் அருகதையில்லை.

எமது தோழர்கள் என்ன நோக்கத்திற்காக போராடி தமது உயிரைல தியாகம் செய்தார்களோ அந்த நோக்கத்திற்காக தொடர்ந்து போராடுவதுதான் அவர்களுக்கு செய்யும் உண்மையான அஞ்சலி, கௌரவம் ஆகும். அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதவர்கள், வக்கற்றவாகள் அந்த தியாகிகளை நினைவு கூருகிறோம், கௌரவிக்கிறோம் என்று கூறி அந்தத் தியாகிகளின் பேரைச் சொல்லி நிதி சேகரிப்பில் ஈடுபடுவது மோசடி ஆகும்.

கட்சிக்குள் ஜனநாயகம், கட்சிகளிடையே ஐக்கியம் என்பவற்றை வலியுறுத்தி அதற்காக உண்மையாக உழைத்தவரும், உழைக்கும் மக்களை, அவர்களின் விடுதலையை நேசித்தவரும், ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்கள் எனபவற்றுக்கெதிராக உறுதியாக செயற்பட்டவருமான தோழர் பத்மநாபாவினதும், அவரின் வழியை பின்பற்றி உயர் நீத்த தியாகிகளினதும் பேரை உச்சரிப்பதற்குக் கூட அவர்களின் பாதையை கைவிட்ட அவர்களின் வழியை பின்பற்றி கட்சியை வழி நடத்தத் தவறிய எவருக்கும் தகுதியில்லை.

**கே. மோகன் (யாழ், பிராந்திய செயலாளர்)**
**22.05.2001 பத்திரிகைச் செய்திலிருந்து.**

படிப்பகம்

www.padippakam.com



# மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்ப தடையில்லை நாங்கள் மட்டும் இங்கே வீடு திரும்ப வழியில்லை

கடந்த வருடம் மே மாதம் தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த எங்களை அலைத்து உலைத்து இவ்வருடம் மே மாதம் மீளக்குடியமர அனுமதி வழங்கியது இராணுவம்.

ஒரு வருடத்தின் பின் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல இராணுவம் அனுமதித்த போதும் புலிகள் திரும்பிச்செல்ல வேண்டாம் என்று தடை போட்டிருக்கிறார்கள்.

தென்மராட்சியில் எந்த நேரத்திலும் போர் நடக்கும். இதனால் மீளக்குடியமரும் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று இப்போது தென்மராட்சி மக்கள் மீது கரிசனைபடுகின்ற புலிகள் கடந்த வருடம் தென்மராட்சி மீது தாக்குதல் தொடுத்த போது அங்கிருந்த மக்கள் மீது கரிசனை காட்டவில்லையே. எங்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்த்து செல்லுமாறு முன்னறிவித்தல் கொடுக்கவில்லை.

இடம்பெயர்ந்து செல்வதற்கு கால அவகாசம் விடவுமில்லை. எமது உடமைகள் அனைத்தையும் இழந்து உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடி வந்தோம். எனவே மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதற்காக தென்மராட்சிக்கு திரும்பிச்செல்ல வேண்டாம் என்று தடுப்பதாகக் கூறுவதில் முழு உண்மையில்லை.

தென்மராட்சியிலிருந்து வெளியேற விடாமல் எங்களை தடுத்தவர்கள் புலிகளே தவிர இராணுவத்தினர் அல்ல. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல வேண்டாம் என்று வன்னிக்கு வருமாறும் எம்மை வற்புறுத்தியவர்கள் புலிகளே.

தென்மராட்சியை விட்டு வெளியேறி வரும்போது சண்டையில் இறந்துபோன இராணுவத்தினரின் உடல்களுக்கு மத்தியில் நின்ற இராணுவத்தினரை கடந்து செல்வதற்கு நாம் அஞ்சிய போதும் அவர்கள் நிதானமிழந்து எமக்கு எந்த விதமான தீங்கும் செய்யவில்லை. தென்மராட்சியை விட்டு வெளியேறிய அனேகமானவர்கள் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த வரணிப் பகுதி ஊடாகவே வந்தவர்கள்.

அதேவேளை புலிகள் நிலை கொண்டிருந்த கைதடிப் பகுதி ஊடாக வந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டதும் பின்னர் வேறு பாதைகள் வழியாக காவல் கடமையில் இருந்த புலிகளின் கண்ணில் படாமல் ஒழித்து பதுங்கி தரவையூடாக வந்து சேர்ந்ததும் மறக்கக் கூடிய விடயங்களில்லை.

யுத்தப் பிரதேசத்தில் சிக்கி அந்தரித்த மக்களை வன்னிக்கு கொண்டு செல்வதற்கே புலிகள் ஆர்வம் காட்டினார்கள். வன்னிக்கு செல்ல சம்மதித்த சிலரின் உடைமைகளை எடுத்துச் செல்வதற்கு வசதி செய்து கொடுத்து ஏனையோரையும் கவர்ந்திழுக்க முயன்றார்கள். ஆயினும் புலிகளின் பேச்சைக் கேட்டு வன்னிக்கு செல்வதற்கு அவர்களது ஆதரவாளர்களே சம்மதிக்கவில்லை.

வன்னிக்கு செல்ல மறுப்புத் தெரிவித்த மக்களுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக வேண்டுமென்று அவர்கள் குடியிருந்த இடங்களுக்கு அருகிலிருந்து புலிகள் இராணுவத்தினர் மீது ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இப்போது இராணுவம் மக்களை கவசமாக்கி போரிட முனைந்தது. எமது துல்லியமான திட்டங்களினாலும் எமது அறிவித்தலுக்கு இணங்க மக்கள் இடம் பெயர்ந்து எமக்கு ஒத்துழைப்பு தந்ததினாலும் இழப்புக்கள் குறைக்கப்பட்டது என்று பிளேற்றை மாற்றி விட்டார்கள்.

போகிற போக்கைப் பார்த்தால் எமது திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது வேண்டுகோளுக்கு செவி சாய்த்து தமது உடைமைகளை உதறி எறிந்து விட்டு முஸ்லீம் மக்கள் புத்தளம் பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றார்கள் என்று புலிகள் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

முன்யோசனை இல்லாமல் சண்டை நடந்து கொண்டிருக்கும் போதே கைதடி. மட்டுவில், நுணாவில் போன்ற பிரதேசங்களை மீட்பதாகவும் அந்தப் பகுதிகளை சேர்ந்த மக்கள் மீளக் குடியமருமாறும் புலிகள் விடுத்த வானொலி அறிவிப்பை கேட்டு இடம் பெயர்ந்த மக்கள் சண்டை உக்கிரமடைந்தபின் செய்வதறியாது ஓடி ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது தென்மராட்சி மக்களின் நினைவில் நிழலாடுகின்ற விடயம்.

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மறுகணமே அவர்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் அரசாங்க அலுவலகங்கள், வீடுகள் என்ற வித்தியாசம் இல்லாமல் சகல இடங்களிலிருந்தும் பொருட்கள் அபகரிக்கப்பட்டு வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. வன்னிக்கு கொண்டு செல்வதற்காக ஒன்று சேர்க்கப்பட்ட ஒரு பகுதிப்பொருட்கள் இராணுவத்தினர் திருப்பி தாக்கிய போது புலிகள் சடுதியாக பின்வாங்க நேர்ந்தமையால் வன்னிக்கு எடுத்துச் செல்ல முடியாமல் கைவிட்டுச் சென்றிருப்பதும் தென்மராட்சி மக்களுக்கு தெரியாததல்ல.

தென்மராட்சி மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதை இன்னும் சிறிது காலம் தாமதித்தால் இவற்றையெல்லாம் மூடி மறைத்து விடலாம் என்பதும் புலிகளின் உள்நோக்கமாக இருந்திருக்கலாம். தென்மராட்சிக்கு திரும்பிச்செல்ல வேண்டாம் என்று

**யாழிலிருந்து**
**கே. மோகன்**

வானொலியிலும், பத்திரிகை வாயிலாகவும் அறிவித்தல் விடும் புலிகள், நாங்கள் காலம் காலமாக உழைத்து சேர்த்த பொருட்கள் திருடப்படுவதாகவும், அந்தப் பொருட்கள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் இவ்வாறு திருட்டுக்களில் ஈடுபட்டவர்களின் அடையாள அட்டைகளை வாங்கி விசாரணை நடத்தியதாகவும் திருட்டை தடுப்பதற்கு தென்மராட்சி மக்கள் கண்காணிப்புக் குழுக்களை அமைத்திருப்பதாகவும் அனைத்து பத்திரிகைகளில் செய்தி வெளியிடுகின்றனர்.

தென்மராட்சி மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வேண்டாம் என்று மக்களின் நலனில் அக்கறை கொண்டு தடைபோடும் புலிகள் எமது வீடுகளில் எஞ்சியுள்ள பொருட்களையும் திருட்டுப் போவதை தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? திருட்டுக்களில் சம்பந்தப்படுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் அதற்கான நட்டத்தை செலுத்த வேண்டியேற்படும் என்று இன்று வரை புலிகள் எச்சரிக்காததற்குக் காரணம் என்ன? இவ்வாறு திருட்டுக்கள் இடம் பெற்றால்தான் மொத்தப் பழியையும் இந்த சில்லறைத் திருடர்கள் மீது போட்டு தாம் தப்பிக் கொள்ளலாம் என்பதைத் தவிர வேறு காரணிகள் இருப்பதாய் தெரியவில்லை.



தென்மராட்சிக்கு திரும்பும் மக்களை இராணுவம் கேடயமாக பாவிக்கும் என்று புலிகள் கூறுவது பொருத்தமில்லாத சாட்டு. பல வருடங்களாக வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் வெளியுலக தொடர்புகள் மறுக்கப்பட்டு வன்னிக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியிலும் கிலி ஏற்படுத்துவதற்கு செய்யும் பிரச்சாரத்தை இங்கு பல வருடங்களாக இராணுவத்தினருக்கு நடுவே சீவிக்கும் குடா நாட்டு மக்களைப் பயமுறுத்தவும் பயன்படுத்தப்படுகிறது.

தென்மராட்சி மக்கள் இது குறித்து அஞ்சவில்லை. இராணுவம் கவசமாகப் பாவிக்க எண்ணினால் தென்மராட்சியில் மீளக் குடியமரவும் மக்களைத் தான் பாவிக்கும் என்றில்லை. தென்மராட்சி தவிர்ந்த குடாநாட்டின் பகுதிகள் விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களா? புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளா? குடா நாட்டு மக்கள் அனைவருமே இராணுவத்தினருக்கு மத்தியில்தான் வாழ்கிறார்கள்.

எனவே பொது மக்களை இராணுவம் கேடயமாகப் பாவிக்க எண்ணினால் அதைத் தடுக்க புலிகளாலும் முடியாது என்பதுதான் யதார்த்தம்.

ஒரு பக்கத்தில் மக்கள் துன்பப்படுகிறார்கள், அகதிகளாக அலைகிறார்கள், நடைப்பிணங்களாகிவிட்டார்கள் என்று மக்களுக்காக உருகுவது போல புலிகளும் அவர்களது ஆதரவாளர்களும் பிரச்சாரம் செய்துக் கொண்டே கல்வி சீரழிந்து, தொழில் வாய்ப்பை இழந்து, அடிப்படை வசதிகளின்றி அகதி முகாம்களிலும் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்து அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் எமது கஷ்டங்களை அறிந்திருந்தும் நாங்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு தடை போடுவதானது எமது கஷ்டங்களை தண்டோரா போட்டு பிரச்சாரம் செய்வதில் காட்டுகின்ற அக்கறை எமது கஷ்டங்களை போக்குவதில் இல்லை என்பதை தெளிவுப்படுத்திக் காட்டுகிறது.

புலிகளுக்கு ஆயிரம் நோக்கங்கள் இருக்கலாம் அதற்காக மக்களை மந்தைகளாக நினைப்பதும் மேலும், மேலும் துன்பத்தை ஏற்படுத்துவதும் எந்த வகையிலும் நியாயமானதில்லை.

# தமிழகம் புதிய அரசின் எதிர்காலம்

தமிழகத் தேர்தலில் அ.இ. அ.தி.மு.க கூட்டணி மாபெரும் வெற்றி ஈட்டியிருக்கிறது என்ற செய்தி கேட்டு சில வாரங்கள் கடந்து விட்டன.

தி.மு.க கூட்டணிக்கும் அ.தி.மு.க கூட்டணிக்கும் விழுந்த வாக்குகளின் வித்தியாசத்தைப் பார்க்கப்போனால் வெறும் 24 லட்சம்தான். மலைக்காதீர்கள்!.

தமிழ் நாட்டில் வெற்றிவாகை சூடுவது, மகத்தான வெற்றி பெறுவது என்பதெல்லாம் கூட்டல் கழித்தல்களில் தான் இருக்கிறது.

பிரதானமாக இந்த இரு பிரதான கூட்டணிகளில் காங்கிரஸ் கட்சி எந்தப்பக்கம் நிற்கிறதோ அந்தக் கூட்டணிக்குத்தான் வெற்றி வாய்ப்பு அதிகம். அப்படி ஒரு கிங் மேக்கர் இமேஜை காங்கிரஸ் கட்சி பெற்றுள்ளது.

இப்போது மறுமலர்ச்சி தி.மு.க, பா.ம.க ஆகியவையும் நியாயமான தகுதியை பெற்று விட்டன. வேடிக்கை என்னவென்றால் இந்தக் கட்சிகள் தனியாகப் போட்டியிட்டால் ஒரு ஆசனத்தைக்கூட பெறமாட்டா. டெபசிட்டைக் கூட பல இடங்களில் இழக்கும்.

அ.தி.மு.க, தி.மு.க கூட்டணி தவிர்த்து வேறு எந்தக் கூட்டமைத்தாலும் இந்தக் கட்சிகள் மண் கவ்வும். எனவே 10 தொடக்கம் 40 க்குட்பட்ட ஆசனங்களைக் பெற்றுக் கொண்டு கூட்டணி அமைத்து விட்டால் அந்தக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுவிடும்.

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் இந்தக்

அவருடைய தி.மு.க கூட்டணிக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தியதெனலாம்.

சென்னையில் அமைக்கப்பட்ட மேம்பாலங்கள், சமத்துவ புரத்திட்டங்கள், மகளிர் சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் போன்றவை, எல்லாவற்றுக்கும் மேலாக ஜெயலலிதா அணியினரின் ஊழல் மோசடி வழக்குகளும் சேர்ந்து திடமான வெற்றியை தமக்கு பெற்றுதரும் என்று கலைஞர் கருதினார்.

மதச்சார்பின்மையில் நம்பிக்கையுள்ள சக்திகளும் இத் தேர்தலில் குறிப்பிடத்தகுந்த தீர்மானகரமான சக்திகளாக இருந்தன என்பதும் மறுப்பதற்கில்லை.

ஆனால் கணக்குப் பிழைத்துவிட்டது. கணக்கு பிழைத்ததற்கு கலைஞரின் புத்திர பாசமும் ஒரு காரணம்.

அண்மையில் கலைஞர் ஒரு அறிக்கை விடுத்திருந்தார் எழுதி எழுதி என் கைகள் தேய்ந்து விட்டன. பேசிப்பேசி என் குரல் கம்மி விட்டது. இதுவே எனது கடைசி தேர்தலாக இருக்கும் என்றும் அன்பு நெஞ்சங்களை நெகிழ வைத்தார்.

கலைஞர் கூறும் "வினாசகாலே விபரீத புத்தி" அவரளவிலும் வேலை செய்ததோ இல்லையோ அவருடன் மிக நெருக்கமாக இருந்த முன்னாள் சபாநாயகர் தமிழ்குடிமகன், தீப்பொறி ஆறுமுகம் போன்ற தி.மு.க வின் நீண்டநாள் தூண்களும் இறுதிக் காலத்தில் மனமுடைந்து வெளியேறி இருந்தார்கள்.

மாறன் அரசியலில் இருந்து ஒதுங்கப் போ



வதாக கூறி வீட்டில் போய் இருந்து விட்டார். கடைசியில் கலைஞர் குடும்ப சமேதராய் போய் தனது மருகரை அழைத்து வந்தார்.

விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் போன்ற சாதிக் கட்சிகளுடன் அமைத்த பலவீனமான கூட்டணியாகவே அது அமைந்திருந்தது. இந்தத் தவறு மாறன் போன்றவர்களுக்கு முன் கூட்டியே விளங்கியிருந்தது.

ராஜீவ் காங்கிரஸ் வாழப்பாடியாரை தாங்கிப் பிடித்து பா.ம.க ராமதாஸை வெளியேற்றினார். கடைசியில் இரண்டும் கெட்டான் நிலை.

நாலு தொகுதிகளில் வேட்பு மனுக்களை தாக்கல்செய்த ஜெயலலிதா அவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டது தி.மு.க சதி என்பது போல் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட்டதும் தோல்விக்குக் காரணம் என கலைஞர் தெரிவித்துள்ளார்.

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட ஒருவர் எவ்வாறு முதலமைச்சராக முடியும் என்ற

சர்ச்சை எழுந்திருந்த வேளை தமிழக ஆளுநர் பாத்திமா பீபி அவர்கள் ஜெயலலிதா ஜெயராம் அவர்களை முதலமைச்சராக ஏற்றுக் கொண்டார்.

இந்திய சட்டமா அதிபர் திணைக்களம் இதுபற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்துக் கொண்டது.

கேரளாவில் ஊழல் வழக்குளில் சிக்குண்ட பாலகிருஷ்ணபிள்ளையின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டு இருக்கையில் ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் ஏன் நிராகரிக்கப் பட்டன என்ற கேள்வி எழவே செய்தது.

ஊழல் வழக்குக் காரணங்களுக்காகவே பீகாரில் லல்லு பிரசாத் யாதவ் முதலமைச்சராக பதவியேற்க முடியவில்லை.

ஆனால் ஊழல் வழக்கொன்றில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவர் முதல்வராக பதவி வகிக்க முடியாதென்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பே தற்போதைய தமிழக அரசின் எதிர் காலத்தை தீர்மானிக்கும்.

ஆனால் அந்தத் தீர்ப்பு வருவதற்கு முன் எத்தனை தலைகள் உருளுமோ தெரியாது? தற்போது தி.மு.க மீது மாநில அரசின் கழுகுப் பார்வை கவிந்துள்ளது. அது சர்க்காரியா கமிஷனிலிருந்து ஆரம்பிக்கிறது.

எது எப்படியிருப்பினும் குறுகிய காலத்தில் மீண்டும் சட்டசபை தேர்தலுக்கான சாத்தியப்பாடுகளை மறுப்பதற்கு இல்லை.

**தீர்க்க தரிசி**

படிப்பகம்

www.padippakam.com



# கொசோவோ

## இந்த நூற்றாண்டிலும் தொடரும் துயரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**மசிடோனியாவிற்கும் அல்பேனியக் கெரிலாக்களுக்குமிடையே மோதல்கள் முரண்பாடுகள் வெடித்துள்ள இன்றைய நிலையில் கொசோவாவின் துயர்பற்றி ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் உயிர் நிழல் சஞ்சிகையில் உமாகாந்தன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று இங்கு மறுபிரசுரமாகிறது.**

நேட்டோ யுத்தத்தை ஆரம்பித்து இரண்டு மாதங்களின் பின் இன்று பல்வேறு நாடுகளிலும் அகதிகளாகவுள்ள கொசோவோவின் அல்பேனிய அகதிகள் அந்நாடுகளில் தாங்கள் அழையா விருந்தாளிகள் என்று உணர்ந்துக்கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

விரைவில் கொசோவோவின் அல்பேனிய இன அகதிகள் தமது வாழ்விடங்களுக்கு மீளச் செல்ல வழியேற்படுமென நேட்டோ அளித்த வாக்குறுதிகள் வெறுமனே காற்றிலே பறக்க விடப்பட்டவையே என அவர்களால் இப்போது உணரமுடிகிறது.

அல்பேனியாவிலும் மஸிடோனியாவிலும் மொன்ரிநிகிரோவிலும் உள்ள தமது அகதிகள் முகாம்களுக்கு தொலைக்காட்சிக் கமராக்கள் சகிதம் வந்த ரொனி பிளேயரும், லியொனல் ஜொஸ்பனும், ஹில்லரி கிளின்டனும் கைகுலுக்கியதும், கட்டிப்பிடித்ததும் கொசொவோவின் அல்பேனிய இன அகதிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண அல்ல. தமது நாடுகளில் தமது அரசியல் செல்வாக்குகளை அதிகரிக்கவே என்பது காலதாமதமாகத்தான் இந்த அகதிகளுக்குப் புரிகிறது.

இப்போதெல்லாம் மீண்டும் விரைவில் தாம் வாழ்ந்த மண்ணுக்குத் திரும்பிவிடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்குக் குறைந்துக்கொண்டே போகின்றது. அவர்கள் இன்று அடிப்படை வசதிகள் கூட இன்றி பல்வேறுநாடுகளில் அகதிகளாகச் சிதறி வாழவேண்டியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக நேட்டோ யூகோஸ்லாவியா மீது மேற்கொண்டுவரும் யுத்தத்துக்காக கிட்டத்தட்ட 70 பில்லியன் டொலர்களைச் செலவழித்துள்ளதாக ஜேர்மனியின் Der Spiegel சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஆனால் அகதிகளுக்காக ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி அவர்களுக்காகச் செலவழிக்கப்படவில்லை. இந்நிலையில் குளிர்காலம் ஆரம்பித்துவிட்டால் அவர்கள் நிலை சொல்லவே தேவையில்லை. அவர்கள் கொஸோவோ திரும்பும் நிலை ஏற்பட்டால்கூட அங்கு அனைத்தும் புதிதாக நிர்மாணிக்க வேண்டும். ஒருபுறம் சேர்பியப் படைகள் அல்பேனிய இன மக்களின் வீடுகளை தீக்கிரையாக்கி விட்டன.

சொத்துக்களை சூறையாடிவிட்டன. மறுபுறம் கொஸொவோவிலுள்ள தொழிற்சாலைகள், மின்விநியோக நிலையங்கள், அரச கட்டடங்கள், மக்கள் குடியிருப்புகள் அனைத்தும் நேட்டோ விமானங்களின் வான் தாக்குதலில் தரைமட்டமாகிவிட்டன.

இந்நிலையில் கொஸொவோவின் அல்பேனிய மக்களின் நிலை என்ன? அவர்கள் யாரை நம்புவது? தமது விடுதலை அமைப்பான KLA யையா? சரியான இலக்கின்றி, திட்டங்கள் எதுவுமின்றி சேர்பியப்படைகள் மீது சிறு தாக்குதல்கள் நடத்தி அவர்களை ஆத்திரமூட்டி அந்த ஆத்திரத்தை சேர்பியர் மிக மோசமான ஒடுக்கு முறைகளாய் இனத்துவச் சுத்திகரிப்பாய் கொஸொவோவின் அல்பேனிய இன மக்கள் மீது நடத்தும் போது ஓடி மறைந்துவிட்ட KLA யை எப்படி அவர்கள் நம்புவது? நேட்டோவின் குண்டு வீச்சில் தனது போராளிகள் கொல்லப்பட்டபோது ஒரு சிறு ஆத்திரக்குரல்கூட எழுப்பாமல் நேட்டோவிடம் மண்டியிட்டுக்கிடக்கும் KLA யின் இன்றைய சந்தர்ப்பத்தைப் பாவித்து தன்னை வளர்த்துக் கொள்வதேயொழிய, கொஸொவோவின் அல்பேனிய இன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதல்ல.

4000 போராளிகளை வைத்துக் கொண்டு இன்று மேற்குலக தொலைத் தொடர்புச் சாதனங்களினூடு KLA தன்னை ஒரு பெரிய படையாகக் காட்ட முடிகிறது. அது மாத்திரமல்ல சேர்ப்படைகளுக்கு எந்த வகையிலும் குறையாத வகையில் ஒடுக்கு முறைகளை சேர்பிய மக்களுக்கு எதிராக கொஸொவோவில் நடத்தியிருக்கிறது.

இத்தகைய நிலையில் கொஸொவோவின் அல்பேனிய இன மக்கள் தமது எதிர்காலம் குறித்து KLA மீது எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? அப்படியாயின் அடுத்து அவர்கள் யார் மீது நம்பிக்கை வைக்க முடியும்.

மிதவாத அரசியல் தலைவரான இப்ராஹிம் றுகோவோ மீது....? தனது மக்கள் இந்த நூற்றாண்டின் மோசமான ஒடுக்குமுறைகளை அனுபவிக்கும் போதுதான் மிலோஸவிக்குடன் கைகுலுக்கி அறிக்கைவிட்டு பின் தானும் தன் குடும்பத்தினரும் தப்பி இத்தாலிக்கு வந்து ஒரு நட்சத்திரத் தலைவராக ஐரோப்பிய நகரங்களில் வலம் வந்து நேற்று நேட்டோ குண்டு வீச்சை நிறுத்த வேண்டும் என்றும் இன்று நேட்டோ குண்டு வீச்சைத் தொடரவேண்டும் என்றும் சந்தர்ப்பவாத அரசியலைச் செய்யும் றுகோவோ மீது கொஸொவோவின் அல்பேனிய இன் மக்கள் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?

இந்த நிலையில் இந்த அல்பேனிய இன மக்கள் யார் மீது நம்பிக்கை கொள்வது? நேட்டோ மீதா? சேர்பியப்படைகள் கொஸொவோவில் அல்பேனிய இன மக்களை ஒடுக்குவதைக் காரணம் காட்டி யூகோஸ்லாவியா மற்றும் கொஸொவோவிலுள்ள தொழிற்சாலைகள் மின், நீர் விநியோக நிலையங்கள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் போன்றவற்றை குண்டுவீச்சுக்களால் தரைமட்டமாக்கி இந்த மக்களின் வாழ்க்கையை மேலும் 50வருடங்கள் பின்தள்ளிவிட்ட நேட்டோவை, தனது படைகளுக்கான ஒரு பயிற்சிக் களமாகவும் தனது புதிய கண்டுபிடிப்பு ஆயுதங்களுக்கு ஒரு சந்தையாகவும் பால்க்கன் நாடுகளை மாற்றிய நேட்டோவை, நேற்றுவரை சகோதரர்களாக வாழ்ந்த நாடுகளை இன்று எதிரிகளாக மாற்றிவிட்ட நேட்டோவை தங்களுக்கான விடியலைப் பெற்றுத் தரும் என எப்படி எதிர்பார்க்கமுடியும்? அப்படியாயின் இறுதியாக யார்? மிலோஸவிக் மீதா அவர்கள் நம்பிக்கை வைப்பது? தனது எல்லைக்குள் வாழும் மக்களின் மீது இந்த நூற்றாண்டின் மோசமான கொடுமையின் நாயகன்.

தனது மக்கள் படும் துயரங்களை அலட்சியம் செய்து தனது பிடிவாதத்தை முதன்மைப்படுத்துபவர். மொத்தத்தில் உலகின் இன்றைய எரியும் பிரச்சினைகட்கு ஒட்டு மொத்த காரணமானவர். இவர் மீது எப்படி கொஸொவோவின் அல்பேனிய மக்கள் நம்பிக்கை வைக்க முடியும்?

சகல நம்பிக்கைகளையும் இழந்து, சர்வதேச அகதிகளாகியிருக்கும் அல்லது ஆக்கப்பட்டிருக்கும் கொஸொவோவின் அல்பேனிய இன மக்களின் பிரச்சினைகள் வெறுமனே காகிதங்களில் கையெழுத்திடப்படும் ஒப்பந்தங்களால் தீர்க்கப்படாது.

சர்வதேச சந்தர்ப்பவாத அரசியலுக்குள் சிக்குண்டுவிட்ட இப்பிரச்சினைக்கான தீர்வு இலகுவில் அடைய முடியாதது. செல்லும் திசைவழி தெரியாமல் தவிக்கும் கொஸொவோவின் அல்பேனிய மக்களின் வாழ்வு இந்த நூற்றாண்டின் பெரும் துயரம். அடுத்த நூற்றாண்டிலும் தொடரப்போகும் துயரம்.

நன்றி:– உயிர்நிழல்

(இத்தொடர் இவ்விதழுடன் முற்று)

# சினிமா நாயகிகளும் - கிரிக்கெட் நாயகர்களும்

இந்தியாவில் சினிமா எல்லாத் தரப்பு மக்களையும் கவர்ந்த ஒரு பொழுது போக்கு கலாச்சாரமாகவுள்ளது. சினிமா கதாநாயகிகள் கவர்ச்சிக் கன்னிகளாக உலா வருகின்றனர். கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியும் ஒரு பொழுது போக்கு அம்சமாகவே கலந்து விட்டது.



கிரிக்கெட் பிரபல்யங்களும் சினிமா கதாநாயகிகள் போன்று கிசுகிசுக்களில் மாட்டிக் கொள்வது வழமையான ஒன்றாகிவிட்டது.

சினிமா வெப்சைட்டில் கிசுகிசுக்கள் புதிதாக முளைத்த விஷயமல்ல கணனி தோன்றா வெப்சைட் தோன்றா காலங்களிலேயே குறிப்பாக 1960களில் உலக கிரிக்கெட் வீரர்கள் அதுவும் குறிப்பாக இந்திய கிரிக்கெட் பிரபலங்கள் சினிமா கதாநாயகிகளிடம் கிளீன் போல்ட் ஆனது ஆரம்பமாகியது. இந்தியப் புலி என அழைக்கப்படும் நவாப் பட்டோடி இந்தி சினிமா தாரகை சர்மிளா தாகூரை (ஆராதனா -புகழ்) காதலித்து கைப்பிடித்தார். இன்றுவரை இத் தம்பதி சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை மேற்கிந்திய தீவுகளின் முடிசூடா மன்னன் சேர் கார்ஃபில்ட் சோபோர்ஸ் இந்திச்சினிமா கதாநாயகி அஞ்சு மகேந்திராவையும் தமிழ்ச் சினிமாவில் கொடிகட்டிப் பறந்த கன்னடத்துப் பைங்கிளியையும் காதலித்தார். ஆனால் இவரைப் பின் தொடர்ந்த மேற்கிந்திய வீரர் சேர் விவியன் ரிச்சர்ட்ஸ் இந்தி சினிமாத் தாரகை அமிர்தாசிங்கை காதலித்து இருவரும் ஊரறிய திருமண வைபவம் ஒன்று நிகழ்த்தவில்லையே தவிர கணவன் மனைவியாக வாழ்ந்து அமிர்தாசிங் ஒரு குழந்தையையும் பெற்று விவியன் ரிச்சர்ட்ஸிற்காகவே இன்னமும் வாழ்கின்றார்.

இந்தியாவின் இன்னுமோர் சுழற்பந்து வீச்சாளரான ரவி சாஸ்திரி பந்தை மட்டுமா சுழற்றினார்- பல இந்தி நடிகைகளையும் சுழற்றினார். குறிப்பாக நீட்டுசிங்கை மணம் முடித்துவிட்டார் என்று கூட கதைகள் பரவ ஆரம்பித்தது. ஆல் ரவுண்டரான ரவி சாஸ்திரி கடைசியில் வேறோர் குடும்பப் பெண்ணையே திருமணம் செய்து கொண்டார்.

இவற்றையெல்லாம் மிஞ்சிய கலக்கல்தான் அசாருதீன்- சங்கீதா



மறுமணம். முதலில் ஹைதராபாத்தில் சாதாரண இஸ்லாமியப் பெண்ணை மணந்து பிள்ளை குட்டிகளுடன் வாழ்ந்த அசார் கிரிக்கெட் புகழின் உச்சியினை அடைந்ததும் இந்திய அழகியும் சினிமாத் தாரகையுமான சங்கீதாவைக் காதலித்து தனது முதல் மனைவியை விவாகரத்துச் செய்து கைப்பிடித்தார்.

சங்கீதாவை மணம் முடித்த கையுடனேயே மும்பை தாதா தாவூத் இப்ராஹிமின் வலையில் வீழ்ந்து கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கி கடைசியில் தனக்கும் தாய் நாட்டிற்கும் அவமானச் சின்னமாகிவிட்டார்.

படிப்பகம்

இறுதியான லேட்டஸ்ட் கிசுகிசுதான்



கங்குலி- நக்மா காதல் விவகாரம். இந்த விஷயத்தால் கங்குலி தடுமாறியது ஏதோ ஓரளவில் உண்மைதான். கங்குலி- நக்மா விவகாரம் கங்குலியின் திறமையையும் மனோதிடத்தையும் பாதித்துள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டிகளில் பெங்காலிப் புலி பூனையாக மாறியது ஏனோ? கங்குலி இன்னுமோர் அசாருதீனாக மாறிவிடக் கூடாதென்பதே இந்திய கிரிக்கெட் உலகின் ரசிகர்களின் விருப்பமாகும். கங்குலி இந்தப் பிரச்சினையிலிருந்து மீண்டு தன் கலாச்சாரமிக்க வங்காள குடும்பத்துடன் இணைந்து இந்தியாவைக் காப்பாற்றுவாராக என நம்புவோமாக.

www.padippakam.com



Regd. in the Dep. of Posts of Sri Lanka under (No: QD / 41 / News / 2001

# மகத்தான வெற்றி



மாட்- கவ் (Mad-Cow), ஆசியர்களுக்கு எதிரான இனவாதம் எல்லாவற்றையும் கடந்து பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சி மகத்தான வெற்றியீட்டியுள்ளது. இது பிரித்தானிய மக்களின் நிதானத்தையும் அனுபவத்தையும் புலப்படுத்துகிறது.

பிரிட்டனில் மக்கள் உழுத்துப்போன பழைய உலகத்தில் வாழ விரும்பவில்லை. வேகமும், விவேகமும் கொண்ட பிளேயர் போன்ற இளம் இரத்தங்களைத்தான் விரும்புகிறார்கள் போலும்.

# அரச குடும்பம் அடியோடழிந்தது.

## காதலா வெறியா!



நேபாள மன்னர் குடும்பம் அடியோடழிந்ததற்கு காரணம் மன்னரின் வாரிசு திபேந்திராவின் காதலுக்கு குடும்பத்தவர் எதிர்ப்பு தெரிவித்ததற்காகவே என்று கூறப்படுகிறது.

காதல் எவ்வளவு மென்மையான உணர்வு! அதற்கு குரூரமும், வன்மமும் நிறைந்த மறுபக்கமும் இருக்கிறதா? திபேந்திரா இறந்து போனார். இவரது காதலி தனது பெயர் இதில் சம்பந்தபட்டதற்காக எவ்வளவு சங்கடப்படுவாரோ.

இவர் இந்திய குவாலியர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர். காலஞ்சென்ற பி.ஜே.பி முக்கிய பெண்மணி விஜயராஜி சிந்தியாவின் மகள் வயிற்றுப் பேத்தி.




மளிகைக் கடை பையன், ஒரு டாக்டரிடம் பை தூக்கும் உத்தியோகம், மாவு மெசின் வேலை, கம்பசிடர், புத்தகம் விற்பது, மாவு மெசின் பாகங்கள் செய்கின்ற பக்டரியில், இஞ்சினுக்கு கரிவாரிக் கொட்டும் வேலையில் கொஞ்சநாள், சோப்பு பக்டரியில் கை வண்டி இழுத்து, புருப் ரீடர், பத்திரிகை உதவி ஆசிரியர்.

யாரென்றா கேட்கிறீர்கள்! எழுத்துலக மேதை ஜெயகாந்தன் அவர்களே.

# ஆர்.கே. நாராயண்

மறைந்த மாமேதை "மால் குடி ரைம்ஸ்" ஆர்.கே. நாராயண் அவர்கள் பல நாவல்கள், சிறுகதைகளை ஆக்கியிருந்தாலும் ஆரவாரம் இல்லாத வாழ்க்கையை விரும்பினார்.

தான் சமூகத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட தனது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே அவரது மேலோங்கிய எண்ணமாக இருந்தது.



அவர் எனது பள்ளிப் பாடத்திட்டங்கள் எப்படி குழந்தைகளின் திறனை மழுங்கடிக்கின்றன என்பது குறித்தும். அவர்கள் சுமக்கும் பாடப்புத்தகங்களின் சுமையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மிகுந்த வேதனையுடன் கூறியுள்ளார்.

அவர் ஒரு தமிழர் என்பதே பலருக்குத் தெரியாது. குடத்திலிட்ட விளக்காகவே அவர் பிரகாசித்தார்.

# சச்சினின் சாதனைகள்



கிரிக்கெட் வரலாற்றில் சாதனைகள் படைப்பதில் சேர் டொனால்ட் பிரட்மென்னிற்கு அடுத்ததாக முன்னணியில் நிற்பவர் சச்சின் டெண்டுல்கார். சச்சின் இதுவரை நடைபெற்ற ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் 10,000 இற்கு மேல் ஓட்டங்களைக் குவித்து 35சதங்கள் உட்பட துடுப்பாட்ட வீரராகத் திகழ்கின்றார்.

சச்சினிற்குப் பின்னால் தொலைவில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டீவ் வோ, பாகிஸ்தானைச் சேர்ந்த இன்சாமம்உல் ஹக் ஆகியோர் 8000 ஓட்டங்களுடன் உள்ளனர். ஆயினும் சச்சின் தற்போதுள்ள களத்திறமையினால் அவரை யாரும் நெருங்குவதே எண்ணிப் பார்க்க முடியாத விஷயம். இமாலய உச்சியில் இருக்கும் சச்சின் மேன்மேலும் சாதனைகளை ஏற்படுத்த எமது வாழ்த்துக்கள்.




இன்றைய எகிப்து நாட்டு தலை நகரான கெய்ரோவில் நைல் நதியின் மேற்குக் கரையில் தான் பிரமிட்டுக்கள் காணப்படுகின்றன. அங்கு மொத்தம் 10 பிரமிட்டுக்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் மூன்று மட்டுமே அளவில் பெரிதாகவும், இன்றளவும் பேசப்படுவதாகவும் உள்ளன. இவற்றுள் உலக அதிசயமாகக் கருதப்படும் உன்னத பிரமிட்டு கிரேட்(Great) பிரமிட்டு என குறிப்பிடப்படும் மிக உயரமான குஃபு பிரமிட்டுத்தான். கி.மு 2560 இல் இந்த பிரமிட்டு உருவானதென சில வரலாற்று ஆசிரியர்களும் அதற்கு முன்னரே உருவாகிவிட்டதாக வேறு சிலரும் கூறுகிறார்கள். எப்படியிருப்பினும் பிரமிட்டு எனப்படும் இந்த உருவமைப்பு எதுவும் கி.மு 2700க்கு முன் இருந்ததில்லை எனலாம்.

அந்தக் காலத்தில் வாழ்ந்த எகிப்து நாட்டு மக்கள் பேரரசர்களை கடவுளின் அவதாரமாக வழிபட்டு போற்றினார்கள். அரசர்கள் இறந்த பின்னர் அவர்களுக்கு சிறப்பு செய்வதாக எண்ணியே பிரமிட்டு வடிவில் கல்லறைகளை கட்டினர். பிரமிட்டுகளின் சரிந்த பக்கங்களின் வழியே மேல் ஏறிச்சென்று சொர்க்கத்தை எட்டி மீண்டும் கடவுளை அழைத்து வருவர் என்பது அப்போது நிலவிய நம்பிக்கை.




யாழ், மாவட்டத்தில் ஆவரங்காலில் 20-05-2001 நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரி.

# வாசிப்பும் ஒரு அனுபவம்தான்

புதுமைப்பித்தன் வாசிப்பில் ஆங்கிலம் சார்ந்தும், சமகால இலக்கியம் சார்ந்தும், பழந்தமிழ் சார்ந்தும், மிகுந்த ஆர்வம் கொண்டவர் என்பதை அவரது சக படைப்பாளிகள் உறுதி செய்திருக்கின்றனர். வாசிப்பிலிருந்து அவர் பெற்ற பாதிப்பும், திரட்டிக் கொண்ட அறிவுகளும், செய்திகளும் அவரது எழுத்தை நவீன காலத்துக்குரியனவாக மாற்றுவதற்கு உதவியிருக்கின்றன. மேற்கத்திய அறிவு சார்ந்த கீற்றுக்களும், நம் பண்டைய படைப்புக்கள் சார்ந்த மின் வெட்டுக்களும் அவர் எழுத்தில் விரவி வருகின்றன. தீவிரப் படைப்பாளிகள் வாசிப்பில் கொள்ளும் ஆர்வம் அபூர்வமானதல்ல. ஆகவே புதுமைப் பித்தனின் வாசிப்பை நாம் அதிகம் அழுத்தவேண்டியதில்லை. வாசிப்பு சார்ந்த ஆர்வம் ஒரு பக்கமிருக்க மிகக்குறைவான வாசிப்பிலிருந்து கூட மிக அதிகமான விசயங்களை உறிஞ்சிக்கொள்ளும் அவருடைய உணர்வுகள் மிகக் கூர்மையானவை. வாசிப்பில் பேய் வெறி கொண்ட க.நா.சு. புதுமைப்பித்தனின் வாசிப்பைப்பற்றிக குறிப்பிடுகையில் தானும் அவரும் படித்த ஒரு நூலில் இருந்து தன்னை விட அவர் பெற்றுக் கொள்ளும் விசயம் அதிகம் என்று பொருள்படக் கூறியிருக்கிறார்.

..... சுந்தர ராமசாமி.

படிப்பகம்

தி. சிறிதரன் 141A. மன்னார் றோட், தருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினபுரிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது